THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. I / புத்தகம் I — சௌமியஹூ தைமீ 1௳ — 1909ஹூ ஜனவரிமீ 14௳ — No. 10 / பிரதி 10

லாஹோர் கைத்தொழில் மஹாசங்கம்

LAHORE INDUSTRIAL CONFERENCE

சென்ற டிசம்பர்மீ 30௳ யன்று லாஹோரில் கைத்தொழில் மஹாசங்கம் கூடிற்று. அதில் தர்பங்கா மஹாராஜா அவர்கள் அக்கிராசனாதிபதியாயிருந்தார்கள். இந்தத் தேசத்தில் பூர்வீகமாய் நடத்தப்பட்டுவரும் கைத்தொழில்களை அபிவிர்த்தி செய்வதற்கும் நூதனமான கைத்தொழில்களை ஸ்தாபிப்பதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வது அந்த மஹா சங்கத்தின் முக்கிய நோக்கம் என்றும், இத்தேசத்திலுள்ள எல்லாக் கைத்தொழில்களிலும் முக்கியமானது விவசாயம் என்றும், அந்தக் காரணத்தினால் விவசாயத்தின் அபிவிர்த்தியைப்பற்றி முதல் கவனிக்கவேண்டும் என்றும் மஹாராஜா அவர்கள் சொன்னார்கள். மேலும் இந்து தேசத்தில் வசிக்கும் ஜனங்களில் அதிகப் பாகம் விவசாயத்தையே ஜீவனமாக உடையவர்கள் என்றும், கிருஷிகர் ஆதிகாலந் தொடங்கி நடத்திவந்த புராதனப் பழக்கங்களையே இன்னும் நடத்தி வருகிறார்களென்றும், அந்தப் பழக்கங்கள் மிகவும் தாழ்ந்த தரமானவையென்றும், நிலங்களிலிருந்து சாகுபடி செய்து அடையக்கூடிய சரியான மாகூலை நாம் அடைவதில்லையென்றும், அதனால் கோடிக் கணக்கான ஜனங்களுக்கு வருஷம் முழுவதுக்கும் வயிறு நிறையப் போதுமான ஆகாரம் கிடைப்பதில்லையென்றும், இந்

தக் காரணத்தையிட்டு எப்போதாவது க்ஷாம காலம் நேரிடும் போது ஜனங்களுக்கு உண்டாகும் விபத்து எல்லாருக்கும் தெரிந்தே யிருக்கிறதென்றும், நமது காருண்ய கவர்ன்மெண்டாரும் நிலச்சுவான்களும் அந்தக் காலங்களில் எவ்வளவோ தானதர்மச்சாலைகள் ஏற்படுத்தியபோதிலும் ஜனங்கள் மிகவும் வருந்தி மடிந்துபோகிறார்களென்றும், சர்க்காரில் இப்போது விவசாய விர்த்தியைப்பற்றிச் சரியான கவனம் செலுத்தி விவசாயக் கலாசாலைகளையும் சர்க்கார் பண்ணைகளையும் அங்கங்கே ஸ்தாபித்து வருகிறார்களென்றும், என்றாலும் இவைகளினால் ஏதோ ஒவ்வோரிடத்தில் விசேஷபலன் உண்டாகிறதேயொழிய பொதுவாக விவசாயச் சீர்திருத்தம் தேசமெங்கும் உண்டாக மார்க்கமில்லாதிருக்கிறதென்றும், கிராமாந்திரப் பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் விவசாயத்தைக் கற்பித்து அப்பள்ளிக்கூடங்களினருகில் தோட்டப் பண்ணைகளை ஸ்தாபித்து பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பிள்ளைகளில் ஒவ்வொருவரையும் அந்தத் தோட்டங்களில் விவசாயமுறைகளைச் செய்து கற்றுக்கொள்ளும்படி பழக்கவேண்டுமென்பது தம்முடைய நிச்சயமான அபிப்பிராயமென்றும், கவர்ன்மெண்டாரும் கல்வி இலாகா உத்தியோகஸ்தரும் ஜனங்களுக்குக் கல்வி போதிப்பதில் விவாசாயக் கல்வியையே முக்கியமானதாகக் கருதவேண்டுமென்றும் அதிக ஊக்கத்துடன் பேசினார்கள். அதுவுமன்றி விதைபொருக்கி விர்த்திசெய்வதாலும் விவசாய முறைகளைச் சீர்திருத்துவதாலும் நிலங்களின் விளைவை ஒன்றரை அல்லது இரண்டு மடங்கு அதிகப்படுத்தக்கூடுமென்பதைச் சர்க்கார் பண்ணைகளில் நடத்திக் காட்டியிருப்பதாகவும், உதாரணமாக இத்தேசத்தில் ஒரு எக்கர் நிலத்தில் சாதாரணமாய் விளைவாகும் கோதுமை மாகூல் 9-அல்லது 10-புஷல் என்றும், இங்கிலாந்திலோ எக்கர் ஒன்றுக்குச் சராசரியில் 30-புஷலுக்குமேல் விளைகிறதென்றும், இத்தேசத்தின் விளைவை எக்கர் ஒன்றுக்கு 15-புஷலாகும்படி விர்த்திசெய்தாலுங்கூட ஜனங்களின் தற்காலத்திய வறுமையை ஒருவாறு சாந்தப்படுத்தக்கூடியதாகலாமென்றும், அப்படி அதிகப்படுத்துவது கிருஷிசாஸ்திர அனுஷ்டானத்தினால் அசாத்தியமல்லவென்றும் சொன்னார்கள்.

கிராமாந்திரப் பள்ளிக்கூடங்களில் வாசிக்கும் நமது பிள்ளைகளுக்குத் தற்காலத்தில் விவசாயத்தைப்பற்றிய அறிவு கொஞ்சமும் இல்லாமற் போகிறதென்பதில் தடையேயில்லை. அவர்கள் வாசிப்பதற்காக எழுதப்பட்டிருக்கும் புஸ்தகங்களினாலேயே இவ்விஷயம் வியக்தமாகும். கிராமாந்திரப் பள்ளிக்கூடங்களையொட்டி தோட்டப் பண்ணைகளை ஸ்தாபிக்கவேண்டியது கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயங்களில் ஒன்று. தோட்டப் பண்ணைகளை ஸ்தாபிப்பதால் நமது ஜனங்களுக்குண்டாகும் அனுகூலங்களை அடுத்த சஞ்சிகையில் தெரிவிப்போம்.

கால்நோய் வாய்நோய்

FOOT & MOUTH DISEASE

இந்த நோய்க்குக் கேர்மாரி, கால் கோமாரி வாய்க்கோமாரி, கால் நோய் வாய்நோய், காணே, காற்காணே வாய்க்காணே என்று அனேகவிடங்களில் அனேகம் பெயர்கள் வழங்குகின்றன. இது ஒருவிதமான தொத்து சுரம். அனேகமாகக் காலில் இந்த வியாதி உண்டானபின் வாயில் காணப்படுகிறது. சில காலத்தில் வாயில் முதல் காணப்படுவதுமுண்டு. இந்த நோய் மாடுகளுக்கும், செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி, கோழி முதலியவைகளுக்கு முண்டாவதாகத் தெரிகிறது. மனிதருக்கும் சில சமயங்களில் இந்த வியாதியுண்டாகிறதாம். கால் நோய் வாய்நோய் வந்திருக்கும் பசுக்களின் பாலைக் குடித்தால் மனிதருக்கு இந்த வியாதிவருமென்று வெடெரினெரி சர்ஜன் ஹாலன் என்பவர் கால்நடை வியாதிகளைப்பற்றி எழுதியிருக்கும் புஸ்தகத்தில் வெளியிட்டிருக்கிறார்.

ஒரு ஊரில் ஒரு மாட்டுக்கு இவ்வியாதி உண்டானல் கொஞ்சக் காலத்துக்குள் அனேக கால்நடைகளுக்கு அது தொத்திக்கொள்ளுகிறது. இப்படி ஒரு மிருகத்தினின்று இன்னொரு மிருகத்துக்கு இந்த நோயின் விஷம் சம்பந்தப்பட்டால், அதுமுதல் மூன்று நாள் வரையும் அதன் சரீரத்தினுள்ளேயே விஷம் விர்த்தியடைந்து அதன் பின் வியாதி வெளியே தெரியும்.

இந்த வியாதியுண்டானவுடன் கால் நடைகளின் சரீரத்தில் ஒருவகையான நடுக்கமுண்டாகும். அப்படி நடுக்கமுண்டாவது கூர்ந்து கவனிப்பவர்களுக்குத்தான் தெரியக்கூடும். இதன் பின் கொஞ்சநேரத்தில் சுரம் உண்டாகி உடம்பு உஷ்ணமடையும். விசேஷமாக நாக்கைத் தொட்டுப் பார்த்தாலும் கொம்புகளைத் தொட்டுப் பார்த்தாலும் சூடுண்டாயிருப்பது நன்றாய்த் தெரியும். கால்களிலும் கொஞ்சம் சூடு காணப்படலாம். இப்படி காய்ச்சலுண்டாகி கொஞ்சநேரத்துக்கெல்லாம் வாயிலிருந்து தண்ணீர் வடியும். அப்போது கால் நடைகள் அடிக்கடி நாக்கினல் உதடுகளை நக்கிக்கொண்டிருக்கும். இவ்விதமாகக் கால்நடைகள் உதடுகளை நக்கிக்கொண்டிருக்கும்போது தான் அவைகளுக்கு வியாதியுண்டாயிருப்பதாகச் சாதாரணமாய் வெளியே தெரிகிறது. அப்போது வாயைத்திறந்து பார்த்தால் நாக்கிலும் பல் ஈறுகளிலும் கன்னத்தின் உள்புறத்திலும் சில சமயத்தில் மூக்கிலும் கொப்புளங்கள் உண்டாயிருப்பது தெரியும். இந்தக் கொப்புளங்கள் பசுக்களுக்குப் பால் மடியிலும் உண்டாகின்றன. இவைகள் உடைந்து பொட்டுப் பொட்டாய்த் தெரியும். இதைத் தவிரக் கால்களின் குளம்புப் பிளவிலும், குளம்புகளுக்குமேலும் புண்ணுயிருப்பதும் தெரியும். இதனல் கால்நடைகள் அடிக்கடிக் காலை உதறும். இவ்விதமாய்

வியாதிப்பட்ட கால்நடைகள் சாதாரணமாகச் சில தினங்களுக்குத் தீனி தின்கிறதில்லை. புண் ஆறினவுடன் கொஞ்சங் கொஞ்சமாய்த் தீனி தின்ன ஆரம்பிக்கும். கால்களில் புண்ணுண்டானவுடன் கால் நடைகள் நொண்ட ஆரம்பிக்கும். இரண்டு கால்களிலும் கொப்புளங்களுண்டாகிவிட்டால் அவைகள் நடப்பதே அதிக வருத்தமாகும். சிலசமயங்களில் வண்டிக்காரர்கள் தங்கள் மாடுகள் இந்த வியாதியால் நொண்டும்போதும், நடக்கமுடியாமல் வருத்தமடையும்போதும், அவைகளைச் சவுக்கால் அடித்தும் மற்றவிதங்களில் இம்சை செய்தும் வெளியேகொண்டுபோவதை நமது நண்பர்கள் அடிக்கடிக் கவனித்திருக்கலாம். ஆற்றுமணல் உச்சிவெயிலில் காய்ந்து சூடுண்டாயிருக்கும்போது அந்தக்கொதி மணலில் இவ்வியாதி கண்ட கால் நடைகளை நடக்கச் செய்வதுமுண்டு. சிலர் சதுப்புள்ளநிலத்திலும் சேற்றிலும் நடக்கும்படி கால் நடைகளை அடித்து ஓட்டுவார்கள். இப்படிச்செய்வது மிகவும் குரூரமான காரியம்.

பசுவுக்கு வியாதி உண்டானால் அதன் பாலைக்குடிக்கும் கன்றுக்கும் அவ்வியாதி தொத்திக்கொள்ளும். இது ஒரு தொத்துவியாதியென்பது அனேக ஜனங்களுக்குத்தெரியாது. அதனாலேயே அவைகளின் காலிலும் வாயிலுமுள்ள புண்ணுக்கு மருந்து போடும்போது அவர்கள் ஜாக்கிரதையாயிருப்பதில்லை. இப்படி மருந்து போட்டபின்னும், பசுக்களின் பாலைக்கறந்தபின்னும், சரியானபடி கைகளைச் சுத்திசெய்துகொள்ளவேண்டும். அப்படிச் சுத்தி செய்யாமல் சுகமாயிருக்கும் மற்ற கால்நடைகளைத் தொட்டால் அவைகளுக்கு அவ்வியாதி தொத்திக்கொள்ளும்.

கோயம்புத்தூர், சேலம், மைசூர் முதலிய விடங்களிலிருந்து விலைக்குவாங்கி கும்பல் கும்பலாகத் தென்ஜில்லாக்களுக்குக் கொண்டுபோய் விற்கும் கால் நடைகளில் இந்த வியாதியுண்டாவது எல்லாருக்கும் தெரிந்திருக்கும். அதிக வெயிலில் கால் நடைகளை நெடுந்தூரம் நடத்துவதால் இந்த!வியாதியுண்டாவதாக நமது தேசத்தில் அனேகருடைய அபிப்பிராயம். வாஸ்தவத்தில் அவைகள் நடந்துவரும் பாட்டை மார்க்கங்களில் இவ்வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கும் கால் நடைகளின் விஷம் தாக்குவதாலேயே இவ்வியாதி பரவுகிறதென்பது கால்நடை வைத்திய நிபுணர்களுடைய அபிப்பிராயம். இவ்வியாதியுண்டானவுடனேயே தக்க சிகிச்சைசெய்யாமல் கால்நடைகளை அடித்து வேலை செய்யும்படி இம்சிப்பதால் வியாதி அதிகப்பட்டு அப்பால் சிகிச்சை செய்வது பிரயாசமாகிறது. சிலசமயங்களில் இவ்வியாதியுண்டான கால் நடைகளின் குளம்புகள் கழன்றுவிழுந்து கால்கள் முடமாவதுமுண்டு. அனேகமாக இவ்வியாதியினால் கால்நடைகள் ஆகாரந்தின்னுமல் மிகவும் மெலிந்து பலவீனப்பட்டு கெட்டுப்போய் மறுபடியும் அவைகள் உடம்பு தேர வெகு நாட்களாகின்றன. சிகிச்சையைப்பற்றிப் பின்னால் எழுதுவோம்.

கேழ்வரகு சாகுபடியில் செல்லும் விதையின் அளவு

SEED RATE IN RAGI CULTIVATION

கேழ்வரகு மிகவும் உபயோகமுள்ள ஆகார தானியம். தேகத்தைப் போஷிக்கும் சத்தில் இது கோதுமைக்கு அடுத்த தரமுள்ளதாகச் சொல்லலாம். நெல்லைவிடக் கேழ்வரகு அதிகச் சத்துள்ள ஆகாரமாகின்றது. ஆகையால் சென்னை இராஜதானியில் இது அனேகவிடங்களில் ஏராளமாய்ச் சாகுபடி செய்யப்படுகிறது. அதை விர்த்திசெய்யக்கூடிய அனேக வழிகளில் ஒன்றை இம்முறை கவனிப்போம்.

தற்காலத்தில் இறவையில் பயிரிடப்படும் கேழ்வரகைச் சாதாரணமாய் நாற்றுவிட்டு நடுகிறார்கள். கோல்லைக்கேப்பை அல்லது புன்செய்க்கேப்பையை மட்டும் புழுதியில் விதைத்துத் தண்ணீர் பாய்ச்சாமல் மழையின் உதவியால் விளைவாகும்படி விட்டு விடுகிறார்கள். சேலம் ஜில்லாவிலுள்ள சிலவிடங்களில் செவ்வல் நிலங்களை இரண்டு மூன்றுதரம் கோடையில் உழுதுபோட்டு வைக்கிறார்கள். கிணற்றிறவையின் கீழ் பாத்திகளில் கேழ்வரகு நாற்றுவிட்டு வைத்திருந்து புரட்டாசி மாதம் மழை பெய்தவுடன் அந்த நாற்றைப் பிடுங்கி வைத்துக்கொண்டு, நடவேண்டிய நிலத்தைப் புழுதியில் உழும் போது அந்தப் படைச்சால்களில் ஒவ்வொரு நாற்றாய் ஒருவன் போட்டுக்கொண்டுபோக, மறுசால் உழும்போது அந்தமண் விழுந்து நாற்று நிலைபெற்று நடுகை செய்ததுபோலாகிறது. இவ்விதமாய்ப் புழுதியில் நட்ட நடுகைக்குத் தண்ணீர் பாய்ச்சுவதில்லை. அது ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் அடிக்கடி பெய்யும் மழையின் உதவியால் வளர்ந்து விளைவடைகிறது.

இப்படி நடுகைசெய்த பயிரின்ஊடே உண்டாகும் களைப்பூண்டுகளை எடுத்தெறிவதற்காக அதில் பயிருழவு நடத்துவார்கள். இவ்விதமாகப் பயிருழவுசெய்து களையெடுக்கும் முறையில் செல்லும்செலவு மிகவும் குறைவு. மழைகள் அடிக்கடியும் குறிப்பிட்ட காலத்திலும் பெய்யக்கூடிய இடங்களிலெல்லாம் இம்முறையை அனுசரிக்கலாம்.

இவ்விதமான நடுகைக்கும் சாதாரணமாக எல்லா விடங்களிலும் கிருஷிகர் செய்யும் நடுகைக்கும் தற்காலத்தில் ஒரு ஏக்கர் நிலம் நடுவதற்கு ஒரு சென்டு விஸ்தீரணத்தில் ஒரு பட்டணம் படி விதையை நாற்று விடுகிறார்கள். இப்படி நெருக்கமாய் விடுவதில் நாற்று திடமாய் உண்டாகாமல் ஊசித்தாள் பிடித்து மேல் வருகிறது. நடுகைசெய்யுங் கூலியாட்கள் இந்த நாற்றைப் பிடுங்கி நடும் போது திடமாயிருக்கும் நாற்றை நட்டுவிட்டு, நோய்ந்து நறைத்

துப்போயிருக்கும் மெல்லிய நாற்றை தூரத்தில் வீசியெறிந்துவிடுகிறார்கள். ஒரு எக்கர் நிலம் நடுவதற்கு எவ்வளவு விதை அவசியமென்பதையும், அவ்விதையை எவ்வளவு விஸ்தீரணத்தில் விதைக்க வேண்டுமென்பதையும் பரிக்ஷை செய்துபார்த்ததில் பட்டணம் படிக்குக் கால்படி விதையை ஒரு செண்டு விஸ்தீரணத்தில் பாவினால் அந்த நாற்று ஒரு எக்கர் விஸ்தீரணம் நடுவதற்குப் போதுமானதாயிருக்கிறது. இதுவுமன்றி, உண்டாகும் நாற்று முழுவதுமே திடமுள்ளதாயிருக்கும். அந்த நாற்றை நடுவதில் கிடைக்கும் மேனியும் அதிகமாயிருக்கிறது.

சாதாரணமாக அநேக விடங்களில் கேழ்வரகு நாற்று ஜூன் மாதக் கடைசியிலும் ஜூலை மாத ஆரம்பத்திலும் பாவுவார்கள். அது நடுகையாகி விளைவடைந்து செப்டம்பர் மாத முடிவிலாவது அக்டோபர் மாத ஆரம்பத்திலாவது அறுவடையாகும். இந்தக் காலத்தில் சாதாரணமாக மழைகள் பெய்துகொண்டிருக்கும். ஆகையால் பயிர் அறுவடைக்குமுன் மழையில் அடிபட்டுத் தானியமும் வைக்கோலும் கெட்டுப்போகக் கூடியதாயிருக்கும். நாம் சொல்லுகிறபடியாய்க் குறைந்த அளவு விதைபாவிய நாற்று நடுகைசெய்தால் சாதாரணமாய்ப் பாவிய நாற்றுநட்ட பயிர் விளைவடையச் செல்லுங்காலத்தில் ஒரு வாரத்துக்குமுன் விளைவடையும். இப்படி முன்கூட்டி விளைவடைவதால் மாசூல் மழையில் அடிபடாமல் காக்கலாம். மாசூல் அதிகமாய்க் கிடைப்பதும் முன் கூட்டிவிளைவடைவதும் முக்கியமான அனுகூலங்கள். இத்துடன் விதையின் அளவு குறைவாய்ச் செல்லுவதும் ஒரு அனுகூலமாகும்.

ஆகையால் கிருஷிகர் ஒவ்வொரு செண்டுநிலத்தில் முக்கால்படி, அரைப்படி, கால்படி, அரைக்கால்படி விதையை வெவ்வேறாகப் பாவி அந்தநாற்றை நட்டு அதின் அனுகூலப் பிரதிகூலங்களைப் பரிக்ஷித்துப் பார்த்துக்கொள்ளலாம். நம்மனுபோகத்தில் ஒரு செண்டு நிலத்தில் கால்படி.விதை பாவிய நாற்று அதிக விசேஷமாய்ப் பலன் கொடுத்திருக்கிறது; அந்தந்த இடத்தின் மண்பாங்குக்கும், சீதோஷ்ணத்துக்கும், காலவியல்புக்கும், செய்நேர்த்திக்கும், எருவிடும் முறைகளுக்கும், நீர்ப்பாய்ச்சும் விதத்துக்குந் தக்கதாக விதைமுதல் சற்றுகூடியுங் குறைந்தும் இருக்கலாம். அப்படியிருந்தாலும் அங்கங்கே நாம் சொல்லும் பரிக்ஷையைக் கவனத்துடன் நடத்தினால் ஒரு எக்கர் நடக்குறைந்தது எவ்வளவு விதைதான் விதைக்கவேண்டும் என்னும் விஷயம் திட்டமாய்த்தீர்மானமாகும். இவ்விராஜதானி முழுவதிலும் சாகுபடியாகும் நிலங்களில் 100-க்கு $5\frac{1}{2}$ பாகத்தில் கேழ்வரகு பயிராகின்றது. தென்னார்க்காடு, வடஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திரிச்சினாப்பள்ளி, மதுரைஜில்லாக்களில் இது முக்கியமாய்ச் சாகுபடியாகின்றது. இவ்விடங்களிலுள்ள கிருஷிகர் இவ்விஷயத்தை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

கோயம்புத்தூர் ஜில்லாவின் காலஸ்திதி

SEASONS OF COIMBATORE DISTRICT.

சென்ற நூறுவருஷக் காலமாக கலெக்டர்களால் அனுப்பப்பட்ட ஜமா பந்தி முதலான ரிப்போர்ட்டுகளினுல் இந்த ஜில்லாவின் காலஸ்திதி அதிகப் பரிதாபமானதென்று வெளியாகிறது. விவசாயத்துக்கு அனுகூலமான மழைகளைப்பற்றி யோசிக்கும்போது 1210-ம் பசலிமுதல் 1302-ம் பசலி வரை ஒரு வருஷமாவது கிருஷிகருக்கு முற்றிலும் அனுகூலமானதென்று சொல்ல இடமில்லை. அனேக வருஷங்களில் கார்காலத்து மழைகள் நிதான மற்றும் கேவலமாயும் பெய்திருக்கின்றன. ஜுன், ஜுலை மாதங்களில் பெய்யும் சாரல் மழைகள் தாமதப்பட்டும் சிலகாலங்களில் மிகக் குறைவாயும் பெய்திருக்கின்றன. அனேக வருஷங்களில் அக்டோபர்மீ முதல்பெய்யும் காலமழைகள் சரியான அளவுக்குப் பெய்யாமலும் சில வருஷங்களில் அளவுக்குமிஞ்சிப் பெய்தும் விவசாயத்துக்குக் கெடுதியுண்டாக்கி யிருக்கின்றன.

1865-ம்ளுத்தில் அந்த ஜில்லா கலெக்டர் அதற்கு முன்சென்ற 62-வருஷங்களின் மழையளவு காலஸ்திதிகளைக் கவனித்து, அவைகளில் இரண்டு வருஷங்களில் மட்டும் திருப்திகரமாய் மழை பெய்திருக்கிறதென்றும், 11-வருஷங்களில் நிதானமான மழைகள் பெய்தனவென்றும், 40-வருஷங்களில் மழையளவு கேவலம் என்றும், 9-வருஷங்களில் அதிகக் கேவலம் என்றும் எழுதியிருக்கிறுர்.

சில வருஷங்களில் தொடர்ச்சியாக மழைகள் அதிகக் கேவலமாய்ப் பெய்திருக்கின்றன. 1804, 1805, 1806, 1807 இந்த நான்கு வருஷங்களிலும் அப்படியிருந்திருக்கிறது. ஆகையால் தீர்வை வஜா முதலிய விஷயங்களில் இவ்வருஷங்களில் கலெக்டர்களுக்கு ஜாஸ்தியான அதிகாரம் கொடுக்கப்பட்டது. 1810, 1811 இவ்விரண்டு வருஷங்களில் கருப்பு உண்டானது மன்றி வியாதியால் அனேகர் மாண்டுபோனுர்கள். 1833-ம் வருஷத்தில் "குண்டூர் பஞ்சம்" என்று வழங்கிய பஞ்சத்தால் உண்டான கெடுதிக்கோ அளவில்லை 1835-ம் ளுத்துக்குமுன்தொடர்ந்து 11வருஷங்களுக்குக் காலஸ்திதி கேவலமாயிருந்தது, 1836-37-ம் வருஷத்திலுண்டான பஞ்சமும் கொடுமையானது. இதற்குப்பின் 1852 முதல்1857 வரையிலுள்ள 5-வருஷங்களிலும் பெய்தமழை மிகக் கேவலம்.1861-ம் வருஷத்தில் சாரல் மழையும் காலமழையும் பெய்யவே இல்லை. புன்செய் நிலங்கள் முழுவதும் தரிசு போடப்பட்டன. புன்செய்த் தானியங்களின் விலை இரட்டிப்பாச்சுது. ஜனங்கள் க்ஷாமத்தால் கஷ்டப்பட்டார்கள். சர்க்காரிலிருந்து தர்மசாலைகள் ஸ்தாபித்து ஜனங்களுக்குச் சில வேலைகள் கொடுத்து அவர்களைப் போஷித்ததில் ரூ 20,000 செலவாச்சுது.

1866-ம் ளுத்திலும் க்ஷாமம் உண்டாச்சுது. அவ்வருஷத்திலும் கால மழைகள் குறைந்துபோயின. சாரல் மழைகள் பெய்யவே இல்லை. விலைவாசியும் விசேஷமாய் அதிகரித்தது. ஏழைக்குடிகள் அதிகமாய் வருந்தினர். கிணறுகளில் தண்ணீர் வறண்டது. குடிதண்ணீருக்கும் க்ஷாமம் உண்டாச்சுது. இவ்விதமாக நாளுக்குநாள் க்ஷாமம் அதிகக்கொடூரமாகவே, சர்க்காரில் ஸ்தாபித்த த[illegible] சாலைகளில் ஆகஸ்டு மாதத்தில் நாளொன்றுக்கு 600-பேர் வீதம் ஏழை[illegible]டிகளுக்குச் சாப்பாடு போடப்பட்டது. செப்டம்பர் மாதத்தில் இந்த [illegible]னங்களின் எண்ணம் 1500-ஆயிற்று. நவம்பர் மாதத்திலோ

2600 பேர் ஆனார்கள். இவ்விதமாய் அவ்வருஷத்தில் ஏழைக்குடிகள் வருத்தமடைந்தார்கள்.

இவைகளெல்லாவற்றையும் விட அதிகக்கொரேமான கருப்பு 1876-ம் வருஷம் முதல் 1878-ம் ஷு வரை சம்பவித்தது. 1875-ம் வருஷத்திலேயே கால சுபிக்ஷக் குறைவு ஆரம்பமாய்விட்டது. கொஞ்சக் காலத்துக்கு அது நீடிக்கவே நாடெங்கும் காடுபோல் காணப்பட்டது. பயிர் பச்சை ஒன்றுமில்லாமல் எங்கே பார்த்தாலும் கட்டாந்தரையாய் இருந்தது. இப்படி 1877-ம் வருஷம் அக்டோபர் மாதம் வரை இருந்தது. அப்போது கொஞ்சம் மழை பெய்து கிருஷிகர் தங்கள் நிலங்களையெல்லாம் உழுது பயிரிட்டிருந்தார்கள். நவம்பர் மாதத்தில் அபரிமிதமான மழைகள் பெய்து பயிர்களையெல்லாம் நாசமாக்கிவிட்டன. நேர்த்தியாய் வளர்ந்திருந்த கம்புப்பயிர் முழுவதும் அழிந்து போச்சுது. பசியினால் வாடிப்போயிருந்த ஏழை ஜனங்கள் வியாதியினாலும் பீடிக்கப்பட்டார்கள். முதல் முதல் பெரிய குடித்தனக்காரர் ஏழைக் குடிகளைக் காப்பாற்றினார்கள். இது வெகு நாட்களுக்கு நடக்கவில்லை. அங்கங்கே கட்டிவைத்திருந்த தானியம் முழுவதும் செலவாய்விட்டது. விலைவாசிகள் அதிகப்பட்டன. 1877-ம் வருஷத்தின் ஆரம்பத்திலேயே கொடுமையான பஞ்சம் உண்டாயிற்று. இதை நிவர்த்தித்து ஏழை ஜனங்களைக் காப்பாற்றுவதற்காகச் சர்க்காரில் நூதனமான பாதைகளை உண்டாக்குவதிலும், கிராமத்தெருக்களையும் சந்துகளையும் விசாலிப்பதிலும் நோக்குவதிலும், குளங்களிலுள்ள மேடுகளை வெட்டி ஆழமாக்குவதிலும், நீர்ப்பிடிகளிலுள்ள நாகதாழியை அப்புறப்படுத்துவதிலும், கால்வாய்களிலுள்ள மணல் வண்டல் இவை முதலானவைகளை அப்புறப்படுத்தி அவைகளை துருஸ்தி செய்வதிலும் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு வேலை கொடுத்தார்கள். நெசவுகாரருக்குக் கடன் தொகைகளைக் கொடுத்து அவர்கள் நெய்த வஸ்திரங்களையும் துணிகளையும் வாங்குவோரில்லாமையால் சர்க்காரிலேயே வாங்கிக்கொண்டார்கள். அனேக ஏழைகளுக்குப் பண உதவி செய்தார்கள். தர்ம சத்திரங்களை ஸ்தாபித்து அனேகம் ஆயிரம் ஜனங்களைப் போஷித்தார்கள். 1877-ம் ஷு செப்டம்பர் மாதத்துக்குப் பின் காலஸ்திதி கொஞ்சம் அனுகூலப்பட்டது. என்றாலும் 1878-ம் வருஷத்து முடிவுவரையில் கருப்பு நிவர்த்தியாகவில்லை. வாந்திபேதி எங்கும் பரவி அநேகமாயிரம் ஜனங்களைக் கொள்ளைக்கொண்டது. வயிற்றுக் கடுப்பு, காய்ச்சல் முதலிய பலவியாதிகளால் அனேகமாயிரம் ஜனங்கள் மாண்டார்கள். ஒரு சேர்ப்படி அரிசி ரூ 2.—8-க்கு விற்றதென்றால் அந்தக் காலத்துக் கருப்பின் கொடுமை எப்படியிருந்திருக்குமென்று எல்லாரும் யூகித்துக்கொள்ளக்கூடும்.

கால் வரத்துக் குளங்களின் ஆயக்கட்டு நன்செய் நிலங்கள் விளைந்தன. தோட்டக்கால் பயிர்களும் மேனிக்கு வந்தன. ஆற்றுக்கால்களில் கடைசியிலுள்ள நன்செய்களுக்குத் தண்ணீர் போய் எட்டவில்லை. வானவாரிக் குளங்களும் சரியான ஊற்றுகளில்லாத கிணறுகளும் உபயோகமில்லாமல் போயின. இவ்விதமாகக் கால்வரத்து நன்செய்களிலும் தோட்டக்கால் நிலங்களிலும் உணவு தானியங்கள் விளைவாகவில்லையானால் இந்தப் பஞ்சத்தின் கொடுமை அளவற்றதாயிருந்திருக்கும். 1285-ம் பசலியில் கால் நடைகளின் மரணம் 7532. 1286-ம் பசலியிலோ 1,31,727 கால் நடைகள் மாண்டுபோயின.

சர்க்காரிலிருந்து இந்த வருஷத்தில் விவசாயிகளுக்குக் கடன் கொடு

த்த தொகை ரூ $1\frac{1}{2}$ இலக்ஷம். இப்படிச் சர்க்கார் உதவிபெற்ற கிருஷிகரின் எண்ணம் 10, 700. இதைத் தவிர நெசவுகாரருக்கு 1, 20,000 ரூ கடன் கொடுக்கப்பட்டது. நிலத்தீர்வையில் இலக்ஷக் கணக்காய் வஜாசெய்யப் பட்டது. இப்படி அனேகவிதமாக இந்தப் பஞ்சத்தினல் சர்க்காருக்கு உண்டான செலவு 50 இலக்ஷம் ரூபாயாக மதிக்கப்படுகிறது. சர்க்காருக்கு உண்டான நஷ்டம் இதுவானல், குடிகளுக்கு எத்தனை இலக்ஷம் ரூபாய் நஷ்டமாயிருக்குமென்று யூகித்துக்கொள்ளலாம்.

இதற்குப்பின் 1891-92-ம் வருஷத்தில் இன்னொரு பஞ்சமுண்டாச்சுது. செப்டம்பர் மாதத்துடன் முடிந்த நான்குமாதத்தில் பெய்த மொத்த மழையின் அளவு 5-அங்குலம்தான். சாதாரணமாக அந்தக்காலத்தில் 8-அங்குல மழைபெய்வது வழக்கம். ஆனல் கால மழை காலத்தில் கொஞ்சம் சுபிக்ஷ முண்டாச்சுது. அடுத்த வருஷத்தில் மறுபடியும் மழைகள் குறைந்துபோயின. பவானிதாலுகாவிலேதான் பஞ்சம் அதிகக் கொரேமாய்க் காணப்பட்டது. பஞ்ச நிவர்த்திக்காக ஸ்தாபிக்கப்பட்ட வேலைகளில் 75,695 ரூபாய் செலவாயிற்று. தர்மசத்திரங்களில் 5236 ரூபாய் செலவாயிற்று. தீர்வைவஜாவில் நேர்ந்த நஷ்டம் ரூபாய் 55,902. இவ்விதமாகக் குடிகள் அதிகமாய் வருத்தப்பட்டதால் அப்போதிருந்த கலெக்டர் கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்து அவர்களுடைய அனுமதியின் பேரில் கிணறுகள் தோண்டுவதற்காகக் குடிகளுக்கு 8 இலக்ஷம் ரூபாய் கடன் கொடுத்தார். இந்தக்கடன் பெற்று குடிகள்வெட்டிய கிணறுகளின் எண்ணம் 5000-க்கு மேலிருக்கு மென்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இதைத் தவிர மற்றவகையான நிலவிருத்திகள் நடத்துவதற்காக 74,000 ரூபாய் கடன் கொடுக்கப் பட்டது. கால் நடைத்தீவனமும் நிலங்களில் விதைப்பதற்கு விதையும் வாங்குவதற்காக 80,000 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டது.

இந்த வருஷத்துப் பஞ்சத்தில் 17,000 ஜனங்கள் மாண்டுபோனர்கள். கால் நடைகள் அனேகமாக பவானி, கரூர், கொள்ளேகாலம், பல்லடம் தாலுகாக்களில் மாண்டுபோயின. ஜில்லா முழுவதுக்கும் அவ்வருஷம் சம்பவித்த கால் நடைகளின் மரணம் 127,590 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

1877-78-வருஷத்தில் கோயம்புத்தூர் ஜில்லா கலெக்டராயிருந்த மெஸ்தர் வெட்டர்பர்ண் துரை அந்த ஜில்லாவின் காலஸ்திதியைப்பற்றி எழுதியபோது "எப்பொழுதும் மழைக் குறைவுநேரிடும்; அகால மழைகளும் உண்டு, நிலங்களில் முழு விளைச்சல் என்பது துர்லபம்; அரைமேனியும் கால் மேனியும்தான் சகஜம்." என்று எழுதியிருக்கிறர்.

இந்த ஜில்லாவின் அனேக பாகங்களிலுள்ள நிலங்கள் வளமற்ற தாழ்ந்த தரமானவைகள். அப்படி யிருப்பதுடன் மழைக்குறைவும் வருஷா வருஷம் நேரிடுவதால் ஜனங்களுக்கு உண்டாகும் வருத்தத்துக்கு அளவில்லை. இந்த ஜில்லாவில் இங்குமங்கும் தோட்டக் கால் பயிர் செய்யக்கூடிய கிணறுகள் மட்டுமில்லையானல், அங்கே வசிக்கும் கிருஷிகருடைய நிலைமை இன்னும் அதிகப் பரிதாபப்படத்தக்கதாகவே இருக்கும்.

மேற்கண்டபடி அடிக்கடி சம்பவிக்கும் பஞ்சத்தை நிவர்த்திக்கக் கடவுள்தான் கிருபை செய்ய வேண்டுமென்பது வாஸ்தவமாயினும், ஜனங்களும் கூடிய அளவு முயன்று கிருஷி அபிவிர்த்தியால் பஞ்சத்தின்கொடுமை அதிகமாய் இல்லாமல் நிதானப்படுத்த வேண்டிய காரியங்கள் இடைவிடாமல் செய்து வரவேண்டும்.

விவசாயக் கைத்தொழில் பொருட்காட்சிகளைப் பற்றியும் கால்நடைக் காட்சிகளைப்பற்றியும் சில குறிப்புகள்

SOME THOUGHTS ON AGRICULTURAL AND INDUSTRIAL EXHIBITIONS AND CATTLE SHOWS

இக்காட்சிகள் பொதுவாக விவசாயம் கைத்தொழில்கள், கால்நடை அபிவிர்த்தி முதலிய விஷயங்களுக்கு வெகு அநுகூலமானவைகளென்று இங்கே நாம் சொல்லாமலே எல்லாருக்கும் தெரியும். நமது தேசத்தில் பற்பல இடங்களில், சென்ற சில வருஷங்களாக இந்தக் காட்சிகளை நடத்தி வருகிறார்கள் என்பதே இவ்விஷயத்தில் அனேகருக்குண்டாயிருக்கும் ஊக்கத்தையும், அக்காட்சிகளால் உண்டாகும் உபயோகத்தையும் நன்கு விளக்குகின்றது. விவசாயக் காக்ஷியில் இத்தேசத்திலும் அயல் தேசங்களிலும் உண்டாக்கப்பட்ட விசேஷ விளைபொருட்களைத் தருவித்து வைப்பதால் கிருஷிகர் அவைகளைக் கவனித்துப்பார்த்து "இவைகளெங்கேயுண்டாயின?" "அவைகளை விளைவிப்பதற்கென்ன பருவம் செய்து வருகிறார்கள்?" "நமது நிலங்களிலும் அப்படிப் பருவம் செய்து இப்பொருட்களை விளைவித்துப் பார்க்கவேண்டும்" என்னும் எண்ணம் அவர்களைத்தூண்ட, அதன்பிரகாரமே அவர்கள் தங்கள் நிலங்களில் பரிக்ஷித்து விவசாயவிர்த்தியை நடத்த முயலுவார்கள். இப்படி நூதன விளைபொருட்கள் மட்டுமல்ல. சாதாரண விளைபொருட்களும் விசேஷமாய் விர்த்தி செய்யப்பட்ட பொருட்களும் காக்ஷிசாலையில் வைக்கப்படும். உதாரணமாகச் சாதாரண காய்கறி பதார்த்தங்களையும் கோதுமை நெல் முதலிய தானியங்களையும் செய்நேர்த்தியாலும், எரு விடுவதாலும், அவற்றின் சாதாரண பருமனைவிட அதிக பருமனுள்ளனவாகும்படி செய்திருப்பதையும், பழவர்க்கங்களில் அதிக ருசியுண்டாகும்படி செய்திருப்பதையும் காணலாம். கம்பம்புல் பயிரில் சாதாரணமாக உண்டாகும் கதிர்களைவிட அதிக நீண்ட கதிர்களும், ஒவ்வொரு கதிரிலும் அதிகமான பருமனுள்ளதும் அதிக எண்ணமுள்ள தானியமும் நிறைந்திருக்கிறதையும் காட்டுவார்கள். மேலும் சாதாரணமாக இந்நாட்டில் விளைவாகும் கம்பங் கதிரிலுள்ள தானியத்தைப் பக்ஷிகள் எளிதில் கொத்திப் பொறுக்கிக்கொண்டு போகின்றன. அயல் தேசங்களிலுண்டாகும் ஒருவித கம்பு (Transwal Cumbu) ப்பயிரில் உண்டாகும் கதிரில் முட்கள்போன்ற வால் ஏற்பட்டிருப்பதால் அந்தக் கதிர்களில் பக்ஷிகள் தானியத்தை அதிகமாகக் கொத்திக்கொண்டுபோகமுடியாது. தானியமும் திரட்சியாகவும் சத்துள்ளதாகவுமிருக்கும். இந்தக் கம்பு சாதாரணமாகக் கோவில்பட்டி சர்க்கார் பண்ணையில் விளைவாகிறது. இந்தக் கதிர்களைக் காட்சி சாலையில் பார்த்தவுடன் கிருஷிகர் அவற்றின் அநுகூலங்களை விசாரித்தறிந்து அந்தத் தினிசுக் கம்பம்புல்லைத் தங்கள் நிலங்களில் பயிரிடப் பிரயாசைப்படுவார்கள். சில நெல் தினிசுகளைப் பார்ப்போம். அனேகமாகப் பொடி நெல்லும் மெல்லிய அரிசியுமுள்ள தினுசுகளெல்லாம் விளைவடைய $5\frac{1}{2}$ அல்லது 6 மாதம் செல்லும்; அப்படி நீடித்த நாட்செல்லாமல் $3\frac{1}{2}$முதல் $4\frac{1}{2}$ மாதத்துக்குள் விளைவாகும் மெல்லிய அரிசியுள்ள பொடி நெல்வகைகள் காக்ஷிசாலையில் காட்டப்படுமாயின், தண்ணீர் அதிகமாய்ப் பெருகாத குளங்களின் ஆயக்கட்டில் அந்த நெல் தினிசைச் சாகுபடி செய்ய அனேகர் முயலுவார்கள். சாதாரணமாய் இந்நாட்டிலுண்டாகும் கரும்பைவிட மோரீஸ் நாட்டிலி

ருந்து கொண்டு வரப்பட்ட கரும்பு பருமனிலும் நீளத்திலும், சர்க்கரைசத்திலும் விசேஷமானதென்று கண்டு அதை நாடெங்கும் சாகுபடி செய்ய எத்தனிப்பார்கள். பருத்தியில் வெண்மையான நிறமும், இழைநேர்த்தியும் நீளமும் பட்டுப்போன்ற மிருதுவான குணமும் அமைந்த தினிசுப் பருத்தியை ஒருவர் தமது நிலத்தில் உண்டாக்கி அதைக் காக்ஷி சாலையில் வைப்பாரானால், பருத்தி பயிரிடும் பலரும் அதைப்பார்த்து, அந்த விதையை சேகரித்து விதைத்து விர்த்திசெய்து பயன் பெறுவார்கள். காக்ஷிசாலையில் திருத்தமாயும் குறைந்த செலவிலும் வேலையை நடத்தக்கூடிய கருவிகளும் யந்திரங்களும் வைக்கப்பட்டிருந்தால் அவைகளின் வேலையைப் பரிசோதித்து கிருஷிகர் அவைகளை வாங்கிக் கையாடி அவற்றின் உபயோகத்தால் உண்டாகும் பயனை அடைவார்கள் இவ்விதமாக எத்தனை ஆயிரம் விதங்களிலோ பொருட்காக்ஷிசாலைகள் உபயோகமுள்ளன.

ஆனால் தற்காலத்தில் நமது தேசத்தில் நடத்தப்படும் பொருட்காக்ஷிசாலைகளில் இவ்வனுகூலங்கள் உண்டாகின்றனவா? என்பதைக் கவனிப்போம். அனேக விவசாயக் கைத்தொழில் காக்ஷிகளையும், கால்நடைக் காக்ஷிகளையும் நாம் சென்ற 10-வருஷக்காலமாகக் கவனித்து வருகிறோம். அவைகளில் அனேக விசேஷ விளைபொருள்களும், தானியங்களும், காய்கறிகளும், பழவர்க்கங்களும், விவசாயக் கருவிகளும், கால் நடைகளும் கொண்டுவந்து காட்டப்படுகின்றன. அந்த விசேஷத்தைப் பார்க்கப் பதினாயிரம்பேர் காக்ஷிசாலையின் உள்ளே சென்றால் அதிலுள்ள காக்ஷிப் பொருள்களின் விசேஷத்தை விசாரித்தறியும் பேர் நூறுபேருக்கும் குறைவாகவேயிருக்கும் என்பது எமது அபிப்பிராயம். பெண்களும் பிள்ளைகளும் பாதிக்குமேலிருக்கும். அவர்கள் கூட்டத்தையும் பந்தலையும் அதின்மேற்கட்டிய அலங்காரத் துணிகளையும், கண்ணாடி விளக்குகளையும் கண்டு ஆநந்தித்துச் செல்லுவார்கள். இவைகளைப்போலவே வயது வந்த புருஷரிலும் 100-க்கு 90-பேர் வரை வஸ்து விசேஷத்தைக் கவனியாமல் "அடேயப்பா! எத்தனைவகை நெல்!" "இதென்ன கதிர்? கம்பங்கதிரா? என்ன இது முள்ளுமுள்ளாயிருக்கிறதே?" என்று சொல்லிவிட்டுப் போகிறவர்களே தவிர, அவர்களும் இக்காக்ஷியால் யாதும் பயனடைவதில்லை. கிருஷிகரில் ஏதோ ஒன்றிரண்டு பேர்கள் மட்டுமே காக்ஷிசாலையில் ஏதோ விவசாய விசேஷம் இருக்கும்; அதைக் கவனிக்க வேண்டுமென்று உள்ளே செல்பவர்கள். இவர்கள் சில வஸ்துக்களை அங்கே காணுகிறார்களேயன்றி அவற்றைப் பற்றிய விவரங்கள் ஒன்றும் அவர்களுக்குத் தெரிவதில்லை. சிற்சில சமயங்களில் சிலர் செய்யும் சம்பாஷணையைக் கவனமாய்க் கேட்டிருக்கிறோம். ஒருவர் "இங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டதற்கு மறுமொழியாக மற்றொருவர் "கடைச்சரக்குகளையும் தானியவகைகளையும் அடுக்கி வரிசை வரிசையாய் வைத்திருக்கிறார்கள். இதுதான் விசேஷம்" என்று சொன்னார். அவர்களை விசாரித்ததில் அவர்களில் ஒவ்வொருவரும் 100 சங்கிலிக்குக் குறையாத புன்செய் நிலங்களையுடைய கிருஷிகரென்று வெளியாயிற்று. மற்றொரு சமயத்தில் இரண்டு மூன்று கிருஷிகர் காக்ஷிசாலையில் வைக்கப்பட்டிருந்த மோரீஸ் கரும்பு வகைகளைப் பார்த்து சந்தோஷப்பட்டார்கள். அவர்களில் ஒருவர் "சரிதானையா! நன்றாயிருக்கிறது; வாஸ்தவந்தான். சர்க்காரில் பணம் பணமாகக் கொட்டி எருவிட்டு இப்படி வேடிக்கை காட்டவேண்டுமென்று விளைவித்த கரும்பு இது! நம்மால் அப்படிப் பயிரிட முடியுமா?" என்று சொல்லி மற்றவர்களையும் அழைத்துக்

கொண்டு போய்விட்டார். வாஸ்தவத்தில் அந்தக் கரும்பு ஒரு கிருஷிகரால் பயிராக்கப்பட்டதேயன்றி சர்க்காரால் விளைவிக்கப்பட்டதல்ல. அந்தக் கரும்புக்கட்டுக்கு ஒட்டப்பட்டிருந்த சீட்டை அந்த ஜனங்கள் வாசித்துப் பார்க்கவேண்டுமென்ற எண்ணங்கூட அவர்களுக்குத் தோன்றவில்லை.

இவர்கள் போக; சற்று கவனமாய்ப் பார்த்து வஸ்து நிர்ணயங் கண்டு பிடிக்கக்கூடிய ஒன்றிரண்டு பேர்கள், காக்ஷி சாலையுள் புகுந்து பார்த்தார்களென்று வைத்துக்கொண்டாலும் அங்கேயவர்கள் காணும் வஸ்துக்களுக்கு விவரம் ஒன்றும் தெரிவதற்குச் சாதனங்கள் யாதொன்றுமில்லை. நேர்த்தியான அனேக நெல்தினிசுகள் காக்ஷிசாலையில் வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் சிலவற்றின் உபயோக முதலிய விவரங்கள்மட்டும் தெரிந்திருக்குமானல், அவைகளில் ஒவ்வொரு பிடி நெல் அகப்பட்டாலும் போதுமென ஆவலுடன் அனேகர் சம்பாதித்துப் போவார்களென்பதில் தடையில்லை. வடஆர்க்காடு ஜில்லாவில் பயிராகும் ஓர்வகை நெல் நேர்த்தியானமெல்லிய அரிசியுள்ளது;4 மாதத்தில் விளையும்; காருக்கும் பிசானத்துக்கும்ஏற்றது; மற்ற தினிசுகளைவிட சாதாரணமாக அதிக மேனி தரத்தக்கது. இந்த விவரங்கள் தெரிந்தால் யார்தான் அதை ஆவலுடன் தேடிப் பயிர்செய்யார்?

ஒருவர் பாங்கு நெல்லைப் புன்செய் நிலத்தில் கேழ்வரகுப் பயிருக்கொப்பாய்ப் பருவம் செய்து கிணற்றிறவையால் பயிரிட்டார். அதன் விளைவுக்குக் கொஞ்சம் தண்ணீர்தான் பிடித்தது. அரிசி வெண்மையாயும் மெல்லியதாயுமிருந்தது. இந்த விவரங்கள் தெரிந்தால் யார்தான் அந்த விதையைச் சம்பாதித்து மானவாரிக் குளங்களில் சாகுபடி செய்யார்கள்? திருநெல்வேலி ஜில்லாவில் நான்குநேரியிலும் திருச்சிஜில்லா பிரம்பலூரிலும், வடஆற்காடு ஜில்லாவில் அநேக பாகங்களிலும், செங்கற்பட்டு ஜில்லாவிலும், மதுரை ஜில்லாவில் திண்டுக்கல்லுக்குச் சமீபமாகவும் எத்தனையோ குடிகள் கிணற்றுத் தண்ணீர் இறைத்து வயல்களில் தண்ணீர் கட்டி நிற்கும்படி செய்து நெல் நடுகிறார்கள். அவர்கள் படும் சிரமத்துக்களவுண்டா? அவர்களுக்குக் கேள்வரகுக் கொப்பாய் பருவம்செய்து விளைவிக்கக்கூடிய நெல் தினிசு ஒன்றுண்டென்று தெரிந்தால் அதைச் சாகுபடி செய்யாமல் சும்மாயிருப்பார்களா? (Transwal cumbu) என்னும் கம்பம் புல்லைப் பற்றியாவது, பருத்தி தினிசுகளின் விசேஷத்தைப் பற்றியாவது ஜனங்களுக்கு விவரம் ஒன்றும் தெரியக்கூடிய சாதனங்கள் இல்லை. ஒருவர் திருநெல்வேலி ஜில்லாவில் கோதுமை விளைவித்து அந்தக் கதிர்களைக் கோவில்பட்டி விவசாயக் காட்சியில் வைத்திருந்தார். அது கோதுமைக் கதிரென்று தெரிந்து கொண்டவர்களின் எண்ணம் 10, 15-க்குள் தானிருக்கலாம். இப்படி எடுத்தெழுதக்கூடிய உதாரணங்கள் ஆயிரக்கணக்காயிருக்கும். பொருட்காக்ஷியை ஸ்தாபிக்கும் கனவான்கள் முன்கூட்டியே இந்த வஸ்துக்களைத் தருவித்து, அவைகளை அந்தந்த இடங்களில் வைத்து, அவற்றில் விசேஷமான வஸ்துக்களின் குணகுணங்களைச் சுருக்கமாய் அச்சிட்டு ஆங்காங்கு வைத்து ஜனங்களுக்குத் தெரியும்படியாய்ப் போதிக்கும்படி வேலையாட்களை நியமித்து வைப்பார்களானல் அப்பொருட்காக்ஷியின் அனுகூலம் அதிகமுண்டாகும். பொருட்காட்சிசாலையில் சிலர் ஆங்காங்கு நின்று, பக்கத்தில் போய்க்கொண்டிருப்பவர்களை நோக்கி "ஐயா! இதென்ன தெரியுமா," என்று கேட்பதையும், அவர்கள் "எனக்குத் தெரியாது" என்றுசொல்லிவிட்டுப் போவதையும் அடிக்கடிக் கவனித்திருக்கிறோம். அங்கு வைத்திருக்கும் பொருட்களின் வரலாறு அறிய அபேக்ஷிக்கிறவர்களுக்கு விவரம் தெரிவிக்க ஒருவரும் இருப்பதில்லை. இந்தக்குறையை முதல் முதல் நிவர்த்திக்கவேண்டும். (இன்னும் வரும்.)

நெல் விதைப்பும் நடுகையும்

SOWING AND TRANSPLANTING PADDY

22. இதைவிட இனிதாம் முறையுண்டு
இயன்ற மட்டிலும் இயம்புகிறேன்
பதைப்பில் லாமற் கேட்டறிவீர்
பள்ளியிற் பயிலும் பாலர்களே!
23. நெற்பயி றறுவடை யானவுடன்
நிலத்தை யுழுதஃ துலருமுன்னே
கற்பய றுழுந்து கொழுஞ்சியொடு
காணங் காரா மணிசடம்பு,
24. சிறுபய றொடுமொச் சைக்கொட்டை
சீரா ளுங்கிலு கிலுப்பைவிதை
குறுகிய அவுரி நிலவாகை
கூறிய துவரை விதைக்கநன்றாம்.
25. தரிசை உழுத பயனுண்டு
சமைந்து முணவு பக்குவமாம்
சரியாய் ஒருமழை பெய்திட்டால்
சாலவும் அப்பயிர் வளர்ந்துவிடும்.
26. வெயிலைத் தழைப்பயிர் மறைத்துவிடும்
வேர்களில் எருச்சத் துண்டாகும்
வயலிற் களைகள் முளைக்காமல்
வளர்பயிர் நிலத்தை மூடிவிடும்.
27. மழைகள் பெய்யும் ஐப்பசியில்
மற்றதன் முன்னே இறவையினால்
தழைக்கப் புழுதி நாற்றுவிட்டுத்
தண்ணீர் இறைத்து வரவேண்டும்.
28. நாற்று வளர்ந்து பல்கிவர
நாளும் குளங்கள் நிரம்பிவிடும்
சேற்றுத் தண்ணீர் பாய்ச்சியபின்
சேர்த்துத் தழையைப் பிடுங்கிவிடும்.
29. தண்ணீர் குறைத்து நிலமுழுது
தழையை மிதித்துப் பரம் படித்து
நண்ணும் நாற்றோவ் வொன்றாக
நடுகை செய்தல் நலமாகும்.
30. விதைப்பு நடுகைக் குளபேதம்
விதமாய்ச் செப்புவேன் கேளும்
கதைபோல் கேட்டு மறவாமல்
கவனித் தேநீர் கைக்கொள்ளும்.
31. விதைத்த நிலத்தில் பயிருமொரு
விதமாய்க் கலந்தும் நெருங்கியுமே
சிதைந்தது போல வெளிதெரியும்
சிறுக நடுதல் சீராகும்.
32. நடுகைச் செலவு விதைப்பிலில்லை
எனினும் நாடிப் பயிர்கலத்தல்

கடுக வெளியின் ஊடுநடல்
காணும் இவற்ருல் வெகுதொல்லே.
33. விதைப்பில் களேப்புல் மிகவுண்டாம்
வீண்செல வாகும் களேபறியில்
இதைப்போற் செலவு நடுகையினில்
இல்லே யென்பது தீர்மானம்.
34. இலேதழை எரா ளமாயெய்தும்
இதற்காம் செலவும் மிகக்குறைவே
விலேயது கொடுத்து வாங்குதழை
வீண்செல வந்தோ மதிப்பரிதே.
35. ஆகவே நடுகை வளர்ந்தோங்கி
அபரி மிதமாய்ப் பலன்கொடுக்கும்
ஏகதே சத்தி லன்றி விதைப்
பெப்பொழு தும்பயிர் கேவலமே.
36. அண்ணு! பள்ளர் நெருக்கமதாய்
அனேக முதலேச் சேர்த்திடுவார்
தண்ணீர்ப் பெருக்கால் தனிமுதலும்,
தாழ்ந்து மழுகிக் கெடுமென்பர்.
37. பிடிபிடி நாற்ருய் நட்டதிலே
பெரிதுங் கிளேத்து வளர்ந்தோங்க
முடியா விதமாய் வேர்ப்பின்னி
முழுதும் ஊசித் தாளாகும்.
38. மூச்சு முட்டி நோயுற்று
முற்றும் வெழுத்துப் பழுதாகிச்
சீச்சீக் கதிர்கள் சிறுத்துமிகச்
சிறுமணி பிடித்து விளேவாகும்.
39. அதனுல் மாசு மருப்போக்கி
அரித்துப் பொறுக்கி நல்வித்தை
பதமாய்ச் சிதறிக் கலப்பாகப்
பாங்குடன் நாற்று விடத்தகுமே.
40. திடமாய் வளர்ந்து நட்டபயிர்
தீங்கில் லாமல் ஓங்கிவரும்
அடகேள் குருணி விரைப்பாட்டில்
அறுபக் காவிதை விடுநாற்று,
41. எழங் குலமாய் இடைவிட்டு
எடுத்தங் கொவ்வொரு தனிமுதலாய்
தாழும் ஏக்கர் ஒன்றுநட்த்
தகுமே யிதிலும் மிகுமென்பர்.
42. செழித்தின் னடுகை கவர்வைத்து
செறிந்து தாள்மூ டுகள்கட்டி
பழுத்தொவ் வொன்றில் நீள்கதிர்கள்
பத்துப் பதினேந் துண்டாகும்.
43. மெய்யாய்க் கதிர்கள் மணிபெரிதாய்
மேனியும் நிறைய அறுவடையாம்
வைக்கோல் நிறையுங் குறையாது
வம்பாம் வார்த்தை பலருரைப்பார்.

44 குடிகள் வித்தும் விதைமுதலில்
குறைந்தே அறுபது படிலாபம்
தடியோர் ஏக்கர்க் கிதுவானல்
தரணி முழுதுக் கெம்மட்டோ.
45. நோக்கி எண்ணிப் பார்த்திடுவீர்
நொந்தும் நெற்பயி ரிடுவோரே
வாக்கால் வலியப் பேசுமிது
வார்த்தை வம்பென் றெண்ணுதீர்.
46. ஏனெனி லோகோ யம்புத்தூர்
ஏகி இப்பொழு தேபாரும்
வானேர் புகழத் தனிநடுகை
வளமாய் விளைந்து நிற்பதுவே

திருவள்ளூர்
8—1—1910 } J. DHARMA RANGARAJU.

தைமாதத்திய பருவங்கள்

THE MONTH'S OPERATIONS

செங்கல்பட்டு ஜில்லா.—திருவள்ளூர் தாலூகாவில் வெள்ளை சோளமும், கம்பும் விதைக்கலாம். சைதாப்பேட்டை தவிர மற்றஇடங்களில் அவுரி நெல், மிளகாய், கேழ்வரகு சாகுபடி செய்யலாம்.

தென் ஆற்காடு ஜில்லா.—கம்பு, சோளம், எள்ளு, அவுரி விதைக்கலாம். கேழ்வரகு நடலாம்.

வட ஆற்காடு ஜில்லா.—கங்குந்தி, பால்மநேர் புங்கனூர் தாலுகாக்களில்சோளம்விதைக்கலாம். சித்தூர் குடியாத்தம் தாலூகாக்களில் நெல்விதைப்பார்கள். கார்வேட் நகரம், காளஹஸ்தி சமஸ்தானங்களில் இந்த மாசத்தில் மழை பெய்தால் புன்செயில் கேழ்வரகு விதைக்கலாம். சந்திரகிரி, குடியாத்தம், கார்வேட் நகரம், காளஹஸ்தியில் அவுரியும், எள்ளும் விதைக்கலாம். சில இடங்களில் நெல்லும், கேழ்வரகும், நடுகை ஆகும்.

சேலம் ஜில்லா.—தோட்டக்கால் நிலங்களில் புகை இலையும், கரும்பும் நடுவார்கள். பாலக்காடு, பிரம்மஹால் நாமக்கல் தாலூகாக்களில் நெல் விதைப்பார்கள். ஆத்தூர் தாலூகாவில் சோளம் விதைக்கலாம்.

கோயம்பத்தூர் ஜில்லா.—தாராபுரத்தில் நெல்லும், உடுமலைபேட்டையில் வரகும் சாகுபடிசெய்து முடிவு ஆகும். பவானி தீரத்தில் கரும்பு நடலாம். கரூர் தாலூகாவில் கேழ்வரகும் புகையிலையும் நட இது நல்ல தருணம். உடுமலைப்பேட்டையில் சடம்பும் விதைக்கலாம்.

திருச்சினுப்பள்ளி ஜில்லா.—புன்செயில் அவுரியும், சோளமும் சில இடங்களில் விதைப்பார்கள். முசிறிதாலூகாவில் நன்செய், புன்செய்களில் சோளம், கம்பு விதைக்கலாம்.

தஞ்சாவூர் ஜில்லா,—பட்டுக்கோட்டைதாலூகா தவிர மற்ற இடங்களில் புன்செய்களில் கம்பும், எள்ளும் பயிராகும். நன்செய் நிலங்களில் கேழ்வரகு, புகையிலையும், தோட்டக்கால் நிலங்களில் மக்காச்சோளமும் விதைக்கலாம்.

மதுரை ஜில்லா.—கொடைக்கானல் தாலூகாவில் நெல் நடுகை முடிவாகும். மற்ற இடங்களில் புன்செய் நிலங்களில் வெள்ளைச்சோளமும், வரகும் சாகுபடியாகும். சில இடங்களில் வெள்ளைப்பூண்டு நடக்கூடும்.

திருநெல்வேலி ஜில்லா.—சங்கர நயினார் கோவில், சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், தென்காசி, தாலூகாக்களில் சோளம் விதைக்க இது நல்லபட்டம். நாங்குநெரி தாலூகாவில் எள்ளு விதைக்கலாம்.

குறிப்புகள்

NEWS AND NOTES

செங்கற்பட்டு ஜில்லாவில் மானாவாரியில் செய்த நெற்பயிரும் மானாவாரிக் குளங்களின் ஆயக்கட்டு நிலங்களில் செய்த நெல்பயிரும் மழையில்லாததால் தீய்ந்து கரிந்துபோயின வென்று கேட்டு விசனிக்கிறோம். அந்தக்குடிகள் ஜீவிப்பதற்காகக் கிணறுகளிலிருந்து இரவும் பகலும் தண்ணீர் இறைத்து சில நிலங்களில் நெற்பயிருக்குப் பாய்ச்சிக் காப்பாற்றி வருவதைக்கண்ட கல்நெஞ்சருக்கும் அவர்கள்பால் கனிவு உண்டாகும் என்பதில் தடையில்லை.

சைதாப்பேட்டையில் கூடிய உபாத்தியாயர் சங்கத்தில் விவசாய இலாகாத் தலைவரான மெஸ்தர் கௌச்மன் துரை பள்ளிக்கூடங்களைச்சேர்ந்த தோட்டப்பண்ணைகள் ஸ்தாபன விஷயமாக உபந்நியசித்தார். அவ்விஷயத்தைப்பற்றிக் கவர்ன்மெண்டார் கூடிய சீக்கிரத்தில் வேண்டும் ஏற்பாடுகள் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

கோயம்புத்தூர் விவசாயக் கலாசாலைத் தலைவராயிருந்த மெஸ்தர் ஷெப்பர்சன்துரை இங்கிலாந்துக்குப் போய்விட்டார். அவருக்குப்பதிலாக வடபாகம் விவசாய டிப்டி டைரெக்டராயிருந்த மெஸ்தர் உட் துரை நியமிக்கப்பட்டு வேலை பார்த்துவருதாக அறிகிறோம். இவராவது இவ்வுத்தியோகத்தில் சில வருஷங்களுக்கு ஸ்திரமா யிருப்பாரோவென்பது தான் நமக்குச் சந்தேகமாயிருக்கிறது.

சென்னை விவசாய இலாகாவின் 1908-1909ஞூத்திய ரிப்போர்ட்டு சில தினங்களுக்குமுன் நமக்குக் கிடைத்தது. அதில் வெளியிட்டிருக்கும் பல விஷயங்களைப்பற்றி அடுத்த ஸஞ்சிகையில் தெரிவிப்போம்.

சென்னை விவசாய இலாகாவினால் 1910-ம் ஞூத்திய பஞ்சாங்கம் வெளியிடப்பட்டிருக்கிறது. அதில் அநேக முக்கியமான விவசாய விஷயங்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன.

திருநெல்வேலி, மதுரை, சேலம் இந்த மூன்றுஜில்லாக்கள் தவிர மற்ற ஜில்லாக்களிலெல்லாம் மழை இல்லாததினால் அநேக இடங்களில் நெல் பயிர்கள் தீவடைந்து போனதாகவும், சில இடங்களில் தீவாகும் பருவத்தில் இருப்பதாகவும் தெரியவருகிறது. இந்த வருஷம் முன்னேறி மழைகள் பெய்து சாகுபடி காலத்தில் மழை பெய்யாமல் போனதினால் கிருஷிகரின் ஸ்திதி மெத்த பரிதாபப்படத்தக்கதாயிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் மழை பெய்தால் கொஞ்சமாவது உபகாரமாயிருக்கும்.

நாங்கள் சொல்லுவதைமட்டும் நம்பவேண்டாம்

தயவுசெய்து இக்கடிதத்தை வாசித்துப்பாருங்கள்

ஸ்ரீலக்ஷ்மிவிலாஸ்
நாகை 4—1—10.

மே-௱-௱-ஸ்ரீ, J. R. ரங்கராஜு அவர்களுக்கு,

ஐயா,

முந்தாநாள் இராத்திரி வழக்கம்போல் என் புத்திரியைச் சாப்பாடு வைக்கும்படி சொன்னேன். சுமார் பத்து நிமிஷம் வரையில் நான் காத்திருந்தும் இலை போடாததால் சற்றுக் கோபத்துடன் எழுந்துபோய் என்ன செய்கிறாளென்று பார்த்தேன். படித்துக் கொண்டிருந்தாள். "என்னடி! சாப்பாடு வைக்கச்சொல்லி பத்து நிமிஷங்களுக்கு மேலாகியும்இன்னும் படித்துக்கொண்டிருக்கிறாயே" என்றேன். "அண்ணா தயவுசெய்து சற்றுப்பொறுங்கள். இதோ வந்துவிட்டேன். கொஞ்சந்தான் பாக்கியிருக்கிறது" என்றுசொல்லி விட்டு அப்பாலும் படித்துக்கொண்டே யிருந்தாள். ஒருநாளும் இப்படியவள் செய்ததில்லை யாகையால் என்ன படிக்கிறாளென்று சமீபத்தில் போய்ப்பார்த்தேன். சந்திரகாந்தாவென்று போட்டிருக்கவே "என்னடி அவ்வளவு அபூர்வம்; தமிழ்க்கதைகளெல்லாம் பாட்டி கதைகள்தானே, அதில் இவ்வளவு உற்சாகமேது" என்றேன். அதற்கு அவள் "அண்ணா தாங்கள் சொல்வது மொத்தத்தில் வாஸ்தவந்தான். ஆனால் இராஜாம்பாள், சந்திரகாந்தா என்னும் இரண்டு நாவல்கள் மாத்திரம் அப்படியல்ல. இவைகளைப் படிக்க ஆரம்பித்துவிட்டால் முடிக்கும் வரையில் கீழே வைக்க மனம் வரவில்லை. அவ்வளவு சாமர்த்தியமாய் எழுதப்பட்டிருக்கின்றன. அநேக தமிழ் நாவல்களைப் படிக்க ஆரம்பித்தால் தூக்கந்தான் வரும். ஆனால் இவைகள் அப்படியல்ல" வென்றாள். அவள் சொன்னது உண்மையா என்று பார்ப்பதற்காகப் புஸ்தகத்தை வாங்கி இங்குமங்கும் புரட்டிப் பார்த்தேன்.

நல்ல காகிதத்தில் பிழையற அச்சிட்டிருப்பதையும் இதுவரையில் தமிழ் நாவல்களில் இல்லாதமாதிரியாய் வளவளப்பான கடிதத்தில் மூன்று சித்திரப்படங்கள் சேர்க்கப்பட்டிருப்பதையும் பார்த்த உடனே தமிழ் நாவல்களைக் கையில்கூட தொட விரும்பாத எனக்கு அதைப் படிக்கவேண்டுமென்னும் விருப்பம் உண்டாயிற்று. அன்று இராத்திரி "இராஜாம்பாள்" என்னும் நாவலைப் பூராவாய்ப் படித்துவிட்டுதான் படுத்துக்கொண்டேன். நேற்று சந்திரகாந்தா என்னும் நாவலையும் பூராவாய்ப் படித்தேன். இப்புஸ்தகங்களிரண்டையும் வாசித்தவர்கள் அவைகளைப் புகழ்ந்து தங்களுக்கு அநேக கடிதங்கள் எழுதியிருப்பார்கள். ஆனாலும் எனக்குத் தோன்றுவதை நான் சொல்லுகிறேன். அதிக கேவலமாகிய காகிதத்

தில் 100-அல்லது 120-பக்கங்கள் போட்டு 12-அணு விலை வைத்துப் பணம் சம்பாதிக்கிறவர்களைப் போலல்லாமல் தாங்கள் நல்ல காகிதத்தில் சுமார் 200-பக்கங்கள் வரையில் போட்டு மூன்று சித்திரப்படங்களும் சேர்த்து 12-அணுவுக்கு விற்பது வியக்கத்தக்கதே. "இராஜாம்பாள்" "சந்திரகாந்தா" என்னும் இவ்விரண்டு புஸ்தகங்களையும் தமிழறியும் ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். இனி தாங்கள் வேறு புஸ்தகங்கள் பிரசுரித்தால் தயவுசெய்து முதலில் எனக்கு வி. பி. மூலமாய் இரண்டு புஸ்தகங்கள் அனுப்பக்கோருகிறேன்.

தங்கள் உண்மையுள்ள

(ஒ) கோபாலகிருஷ்ணன்

கேட்ட உடன் சந்தோஷத்தையும்,
பார்த்த உடன் ஆநந்தத்தையும்,
வாசித்த உடன் மனோ உற்சாகத்தையும்,
முடித்த உடன் வியப்பையும்
கொடுக்கும் நாவல்கள் எவை?

"இராஜாம்பாள்"
"சந்திர காந்தா"

என்னும் துப்பு அறியும்
நாவல்கள் தான்.

ஒவ்வொன்றும் கண்டோர் மனதைக் கவரும்
மூன்று சித்திரப்படங்களுடன் கூடியது.

ஒவ்வொன்றின் விலை அணு 12.

தபால் கூலி வி. பி. கமிஷன் அணு 3 பிரத்தியேகம்.
வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,
5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

நோட்டீஸ்

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியிலும் தவறாமல் நமது பத்திரிகை யனுப்பப்படுகிறபடியால், "கிருஷிகன்" சந்தாதார்களில் எவராவது தமிழ் மாதம் ஐந்தாம் தேதிக்குள் பத்திரிகை பெறாவிட்டால், பத்திரிகை பிரசுரமாகிவிட்டதோ இல்லையோ என்னும் சந்தேகமடையாமல் உடனே கிருஷிகன் மானேஜருக்கு பத்திரிகை சேராத விஷயம் தெரிவித்தால் அந்தந்த தபாலதிகாரிகளுக்கு எழுதி விசாரிக்கும்படி செய்வதுடன் வேறு பத்திரிகையுமனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் நமக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் தயவுசெய்து விலாசத்தின்மேல் எழுதியிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும். அச்சடித்திருக்கும் Register No. M. 801 என்பதை எழுதிவிடக்கூடாது என்பதை கவனிக்கக் கோருகிறோம்.

"கிருஷிகன்" சித்திரை ஆடி, ஐப்பசிமாதங்களின் சஞ்சிகைகள் செலவாகிவிட்டதால் இனிமேல் இவ்வருஷத்தில் சேரும் சந்தாதாரர்களுக்கு இம் மூன்றுபிரதிகளும்கொடுக்கமுடியாது. எழுதிய கடிதங்களுக்குப் பதில் கிடைக்க வேண்டுமானல் ரிப்ளை கார்டாவது ஸ்டாம்புகளாவது அனுப்பவேண்டும்.

மானேஜர்

கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. ஷை பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரயமும் அச்சுக்கூலியும் தபால் செலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

சந்தா விபரம்		ரூ.	அ.	பை.
இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு	... ...	0	12	0
வி. பி. கமிஷன் அணா 1-பிரத்தியேகம்.				
தனிப்பிரதி	... ...	0	2	0

மற்ற அயல்தேசங்களுக்கு தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்க ராஜு அண்டு பிரதர்ஸ்,

5, மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

32. "இரத்தசுத்தி":—தேகத்தில் இரத்தம் கெட்டுப் போகுதலால் உண்டாகும் வாய்ப்புண், கண்ணோய், புண்புரைகள், மேஹரணங்கள், மேக தடிப்பு, அரிப்பு, படை, குஷ்டம் முதலிய கருமவியாதிகள், பலஹீனம், அசதி, வாதப்பிடிப்பு, தலைவலி, அக்கினிமாந்தம், அரோசிகம், வாய் கசப்பு, தேகத்தில் நாற்றம், மகோதரம், தோல் நிறம் மாறுதல், தோலில் சொரணை யற்றுப்போகுதல், புத்திமந்தம் முதலிய பற்பல வியாதிகள் குணமாகும். ரத்தத்திலுள்ள நஞ்சைப்போக்கி, சுத்தப்படுத்தி, தேகவலிவு, தேஜஸ், நல்ல பசி, தாதுபுஷ்டி யுண்டாகும். 20-நாளைக்குப் போதுமான மருந்து டப்பா 1-க்கு ரூபாய் 2, வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

33. "சித்தமகரத்துவஜம்":—இது மகரத்துவஜத்தைவிட சிறந்த ஔஷதம். இதனால் தீராதவியாதி ஒன்றுமில்லை. சர்வசுரங்கள், காசம், இருமல், க்ஷயம், அக்கினிமாந்தம், காலரு, சீதபேதி, ரத்தபேதி, ஸகல வாயுவு, இன்னும் எல்லா வியாதிகளும் தீரும். இம்மருந்து உபயோகித்த வருக்கு ஆயுசு 100-வருஷமானாலும் பூரண புருஷத்தன்மை குறையாமலி ருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தோலா 1-க்கு ரூபா 80. ஒரு வாரத்திற் குள்ள மருந்து ரூபா 3. வி. பி. செலவு பிரத்தியேகம்.

34. "வாயுஸம்ஹாரி":—கை, கால், கணுக்களில் பிடிப்பு, வீக்கம், கடுப்பு, கால்முடக்கு, தேகத்தில் உளைச்சல், குற்றல், குடைதல், தலைநோய், பக்கசூலை, பார்சவாயுவு, திமிர்வாயுவு, அஜீர்ணம், குன்மம், அண்டவாயுவு, சூலைவாதம், மலசலக்கட்டு முதலிய அநேகவித வாயுவு ரோகங்களும் தீரும். டப்பா 1-க்கு விலை ரூபாய் 1. வி. பி. செலவு 1-முதல் 3 டப்பாக்கள் வரை யில் அணா 5 பிரத்தியேகம்.

35. "காலரு என்னும் வாந்திபேதிக்கு மருந்து":—இக்கொடிய நோய்க்கு இது கைகண்ட ஔஷதம். டப்பா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு 1 முதல் 3 டப்பாக்கள் வரையில் அனுப்ப அணா 5 பிரத்தியேகம்.

36. "மலபந்த நிவாரணி":—மலஜலக்கட்டு, அக்கினிமாந்தம், வாயுவு, குடல்புரட்டல், மூலச்சூடு, காந்தல், இளைப்பு, மூலம் சரியாமை, புளித்த ஏப்பம் தீரும். தினம் தப்பாமல் காலாகாலங்களில் மலம் உதயமாகும். டப்பா 1-க்கு விலை அணா 10. வி. பி. செலவு 1 அல்லது 2 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

37. "சந்திராமிருதரஸ்":—அசாத்தியமானகாசம், இருமல், க்ஷயம் முதலிய நுரையீரலைப்பற்றிய வியாதிகளைக் குணப்படுத்தும். நல்ல பசியும், தேகபலமும் உண்டாக்கும். டப்பா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு 1 முதல் 3 டப்பாக்கள்வரையில் அணா 5 பிரத்தியேகம்.

38. "சீதபேதிரத்தபேதிக்கு மருந்து":—எத்தனை நாள்பட்டதானா லும் இம்மருந்தினால் வயிற்றுக்கழிச்சல், சீதபேதி, ரத்தபேதி, கிருணி, வயிறு கடுப்பு முதலியவைகள் அடியோடு தீரும். டப்பா 1-க்கு விலை ரூபா. 1. வி. பி. செலவு 1 முதல் 3 டப்பாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை,

தென்னாற்காடு ஜில்லா.

இரங்கோன்

இரஞ்சித போதினி

எப்பொழுதும் சித்திரப்படங்களோடு பிரகாசிப்பதுடன் அறிவைப் பரவச்செய்து ஆனந்தத்தை விளைவித்து யாவர்க்கும் சுகசெல்வ நன்மைகளையும், சுகிர்தபாக்கிய பொக்கிஷத்தையும், நீடூழி பெருகுவிக்கும் ஓர் நவீன மாதாந்தப் பத்திரிகை. இதிலடங்கிய விஷயங்களாவன:—

சுதேச சுகாதார சங்கத்தின் மெம்பர்கள் எழுதும் வியாசங்கள், மனோவசிய சாஸ்திரம், சுகாதாரவிளக்கம், அமெரிக்க சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தினர் கண்டுபிடித்த நூதன விஷயங்கள், வைத்தியக்குறிப்பு, பாலர் பரிபாலனம், ஸ்திரீகளுக்குரிய விஷயங்கள், விநோத விசித்திர விஷயவிளக்கம், அதிரசமஞ்சரி, ஹிதோபதேசம், பழமொழி, விடுகதை விணுக்கள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தமானங்கள், ஜீவாதார மந்திரோபதேசம் முதலிய அரிய பெரிய பல விஷயங்கள்.

இதன் வருஷசந்தா ரூபா 2 தேவையானவர்களுக்கு மாதிரிப்பிரதி அனுப்பப்படும்.

மானிட மர்மசாஸ்திரம்

ரூபாய் 300 இனம்

விவரம் பின் குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொரு புஸ்தகத்திலும் கண்டுகொள்ளலாம்.

		அணா
1.	மானிட ஜீவியத்தின் பலபருவங்கள் (ஓர் உபந்நியாசம்) 23 படங்களுடன்	6
2.	இல்லற இன்ப இரகசியம் (29 படங்கள்)	12
3.	ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும் (46படங்கள்)	12
4.	மாதாவின் மாக்ஷிமை (18 படங்கள்)	6
5.	சிசுவுற்பத்தி (34 படங்கள்)	6
6.	கர்ப்பக்கால சுகாதாரவிதிகள் (8 படங்கள்)	4
7.	கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும்	6
8.	மருத்துவசாஸ்திரம் (8 படங்கள்)	8
9.	சிசு பரிபாலனம் (15 படங்கள்)	4
10.	ஆண், பெண் மலட்டிற்கு நிவாரணம் (5 படங்கள்) ...	8
11.	ஆண்மையின் அழிவும் அதன்மீட்சியும் வாலிபருக்கு (6 படங்கள்)	8
12.	சமயோசித சஞ்சீவி	2

தபாற் செலவு ஒரு அணா

மேற்குறித்த புஸ்தகங்களுக்கு ஒரே தடவையில் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்கு தபாற்செலவு உள்பட ரூபா 5-க்கு அனுப்பப்படும்.

12. புஸ்தகங்களையும் ஒன்றாகச்சேர்த்து உயர்ந்த காலிகோ பயிண்டு செய்து தங்க எழுத்துக்கள் பதித்த பிரதி ஒன்றுக்கு தபாற் செலவு உட்பட ரூபா 5-8-0.

மானேஜர்,
"இரஞ்சித போதினி ஆபீஸ்"
11, 12 கமிஷனர் ரோட்,
இரங்கோன்.

‘தென்னிந்திய விவசாயம்’

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது.

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ **3 0 0**

		ரூ.	அ.	ப.
விவசாய விளக்கம்	... .	1	4	0
தென்னை	....	1	0	0
கரும்பு	... ...	1	0	0
நெல்	... ...	1	0	0

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பென்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,
தென்னிந்திய விவசாயம்,
வண்ணாரப்பேட்டை, சென்னை.

The South Indian Mills Co., Ltd.
TINNEVELLY.

தென் இந்திய மில்ஸ் கம்பெனி (லிமிடெட்)
திருநேல்வேலி.
மூலதனம் ரூ. 900000.

ரூ. 100 பெறுமான சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பம் இப்போது வாங்கப்படுகிறது.

விவரங்கள் திருநெல்வேலி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் சுத்தமான நெய் ஆகஸ்ட்டுமீ முதல் ௸ கம்பெனியில் கிடைக்கும்.

THE COMPLETE LETTER WRITER
2nd Edition Revised and Enlarged
BY
Hari Charan Das
Price Re. 1. *(full cloth Gilt.)*

A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.

It contains Chapters on :—1, Notes and general Information, 2. Private Correspondence, 3. Receipt forms, 4. Bill forms, 5. Municipal Office, 6. Post Office department, 7. Postal department, 8. Income tax Office, 9. Railway Office, 10. Police Office Correspondence 11. Enquiring about a missing article on the Tram-car, 12. Medical department, 13. Collector's Office Correspondence, 14. Correspondence with Attorneys, Vakils, Muktears etc., 15. Correspondence with Doctors, 16. Steamer Correspondence, 17. News paper Correspondence, 18. Commercial and Govt. Office Correspondence, 19. Miscellaneous Applications and forms, 20. Abbreviations and Daily Wages.

A copy of this book will dispense with the necessity of seeking the help of others for writing Letters, Applications, etc.

To be had of—**M. L. DAS CO.,**
122, Baitakkhana Road, Calcutta.

தயவுசெய்து இதனைத் தங்கள் இஷ்டர்கட்கும் காண்பிப்பீராக.

உ

கணேசர் துணை.

சென்னை, வேப்பேரி,

க. பெ. நாராயணசாமி முதலியார் அண்ட் கம்பெனியில்

சாமான் வாங்குபவர்கள் கவனிக்கவேண்டிய

முக்கிய குறிப்புகள்.

கனதனவான்களாகிய ஐயன்மீர்,

சர்வ வல்லபதயாபரமூர்த்தியின் திருவருளாலும், பெரியோர்களின் ஆசீர்வாதங்களினாலும் க. பெ. நாராயணசாமி முதலியார் அண்ட் கம்பெனியென்ற பெயருடன் அநேக வருடங்களாக நடைபெற்று வரும் நம்மிடம் மிகக் கீர்த்திபெற்றதும், உண்மையானதும், தேகத்தைக் கெடுக்காமல் சுகத்தைத் தரத்தக்கதுமான மஹா மேன்மை பொருந்திய அரிய அவிழ்தங்களுள்ளன. ஆகையால் இச்சிறு விளம்பரத்தைப் பார்வையிடும் கனவான்கள் ஒவ்வொருவரும் நாம் இதிற் குறிப்பிட்டுள்ள அவிழ்தங்களைக் கவனித்து தேவையானவைகளை நம்மிடம் பெற்றுக்கொண்டு வியாதி என்னும் துன்பக்கடலினின்று கரையேறுவீர்களாக. அவிழ்தங்களை உபயோகப்படுத்தும் கிரமங்கள் பத்திய நோட்டீஸ் முதலிய விபரங்கள் மருந்துடன் சேர்த்தனுப்பப்படும்.

கவனிப்பு:—இந்த ஜாபிதாவிற் கண்டிருக்கும் அவிழ்தங்கள், மற்றுமுள்ள சாமான்களை வாங்குபவர்களே தபாற்சார்ஜ், மணியார்டர் கமிஷன் முதலிய சிலவுகளை ஒப்புக்கொள்ளவேண்டும். ஆர்டர் அனுப்புபவர்கள் கடிதங்களை தெளிவாய் எழுதுவதுடன் அவர்கள் பெயர், வசிக்கும் ஊர், கடிதங்கள் பட்டோடாசெய்யும் தபாலாபீசின் பெயர், ஜில்லா முதலியவற்றையும் அவர்களின் விலாசத்தையும் தெளிவா யெழுதியனுப்பவேண்டும்.

ஒரேதடவையில் பத்து ரூபாய்க்குமேல் எவ்விதசாமான்கள் வாங்கினபோதிலும் ரூபாய்க்கு ஒரு அணாவீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்படும்.

பதில் சங்கதி அறியவேண்டியவர்கள் ரிப்ளைகார்டாவது அரையணாஸ்டாம்பாவது அனுப்பவேண்டும். முன்பணம் அனுப்பாதவர்கட்கு சாமான்கள் வி. பி. மூலமாயனுப்பப்படும். 8-அணாவுக்குட்பட்ட சாமான்களை வி. பி. மூலமாயனுப்பப்படமாட்டாது.

மணியார்டர், கடிதங்கள் யாவும் கீழ்க்கண்டவிலாசத்திற்கு அனுப்பக் கோருகின்றனம். நட்பெயிட் கடிதங்கள் வாங்கப்படமாட்டாது.

க. பெ. நாராயணசாமி முதலியார் அண்ட் கம்பெனி,
பிரசித்த மருந்தும், புஸ்தகமும் வியாபாரம்,
வேப்பேரி போஸ்ட், மதராஸ் என். ஸி.

விநாயக மான்மியம்.

இந்நூல் உபபுராணங்களிற் சிறந்து தலைமைபெற்றுள்ள விநாயக புராணத்தைச் சுருக்கி நவரசங் கலந்த அகவற்பா நடையில் மட்டுநகர் ஸ்ரீ. ச. பூபாலபிள்ளை யவர்களால் இயற்றப்பட்டுள்ளது. விருத்தப்பா நடையிலுள்ள விநாயகபுராணம் கற்றவருக்கன்றி ஏனையோருக்கு விளங்காக் கடினமானது; வசனநடையிலுள்ள புராணம் மிகவிரிவானது பற்றி வாசிப்பவர்கட்கு ஆயாசத்தை விளைவிக்கும்இயல்பினது;இந்நூலோ கரும்புவனத்தைத் திரட்டிச் சுருட்டி முறுக்கிப்பிழிந்த தட்டுவெல்லம் மாதிரி சுவைதருவது.

சைவசமயிகளானோர் எக்கருமத்தைச் செய்யமுயலும்போதும் ஆதியில் வழிபடுந் தெய்வம் விநாயகக் கடவுளே யாதலின் அப்பெருமானார் திவ்விய சரிதங்களடங்கிய இந்நூல் ஒவ்வொருவர் வசமும் இருக்கத்தக்க தவசியமே. விநாயகபூசை விரதங்க ளநுட்டிப்பவர்கட்கு இதனினுஞ் சிறந்ததாய் வேண்டற்பாலது வேறொன்றில்லை. மூவரும், இந்திரன் முதலியதேவரும், ஆதிசேடன், அகத்தியர், காசிபர், இராவணன், வீமன், நளன், உருக்மாங்கதன் முதலிய அநேகரும் உபாசித்துப் பேறடைந்த சரிதங்களும், பிரமசிருட்டிப்பு, திரிபுரதகனம், சடாக்ஷர மகத்துவம், காசிவிசேடம், சதுர்த்திவிரதம், அருகு வன்னி முதலியவற்றின் வரலாறுகளும், பன்னிரு திருவவதாரங்களும், பிறவும் யாவருக்கும் எளிதில் விளங்கும்படி சுத்தமா யச்சிட்டுள்ளது. புத்தகம் ஒன்றுக்கு கிரயம் ரூபா 1. வி. பி. சார்ஜ் அணா-4.

இயூகலிப்டஸ் ஆய்ல்.

விலையோ சொற்பம். பிரயோஜனமோ அதிகம்.

இயூகலிப்டஸ் குலோபுலஸ் என்னும் கற்பூர மரத்தின் இலையிலிருந்து உண்டாக்கப்பட்ட ஆவியாய்ப் போகத்தக்க சுத்தமான தைலத்தின் ஆசசரியமான குணங்களை முற்றிலும் எடுத்துரைத்தால் விரிவாகுமாகலின் மிகவும் சுருக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

கத்திவெட்டு காயங்கள், நரம்பு சுளுக்குகள், தீ அல்லது வெந்நீரால் உண்டான புண்கள், புரையோடும் இரணங்கள், தொத்துக்குணமுள்ள சகலவித ஜுரங்கள், தொண்டைநோய், கம்மல், மார்சளி, கக்குவான் இருமல், தலைநோய், ஒற்றைத்தலைநோய், பிடரிநோய், கழுத்திசுவு, பக்கசூலை, பாரிசவாய்வு, கைகால் பிடிப்பு, நோய், வீக்கம், இடுப்புநோய், பிரசவவேதனை வாய்வினாலும் சீதளத்தினாலும் உண்டாகும் சகலவித சரீரவியாதிகள், கண்ணெரிச்சல், கண்நோய், கண்கட்டி, காதில் சீழ்வருதல், தேள்கொட்டு, முறடு கட்டிக்கொள்ளுதல், முதலியவியாதிகட்கு இத்தைலத்தை மேலுக்குமட்டும் உபயோகித்துவர சௌக்கியமாகும். இதன் வாசனைபட்டாலும் கொசு, தெள்ளுப்பூச்சி முதலியன அணுகாது. அநேக ஜனங்கள் இதனைவாங்கி உபயோகித்து ஆச்சரியமடைந்திருக்கின்றார்கள். இது ஒவ்வொரு வீட்டிலுமிருக்குமாகில் ஓர் வைத்தியனைப்போல் எக்காலத்தும் எந்நோய்க்கும் உதவியாயிருக்கும். ☞ உபயோகிக்கும் விபரம் மருந்துடன் அனுப்பப்படும்.

கிரயம் புட்டி 1-க்கு ரூ. 0—4—0. வி. பி. சார்ஜ் அணா 4.
,, 12-க்கு ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் அணா 8.

☞ ஒரு புட்டியை தனியாக வி. பி. மூலம் அனுப்பும்படி எழுதுவதைவிட ஏககாலத்தில் மூன்று நான்கு புட்டிகளாகவாவது வேறுஅவிழ்தங்களுடன் சேர்த்தாவது அனுப்பும்படிஎழுதினால் தபாற்செலவு சகாயமாகுமென்றறிக.

தந்தசுத்திப் பொடி.

இந்த வெண்ணிறம்பொருந்திய பற்பொடியினால் பிரதிதினம் பல் துலக்கிவந்தால் பல் அசைதல், குத்தல், கடுத்தல், பல்நோய், பல்லில் ஈர்கட்டுதல், ஈர்கள் வீக்கம், ஈர்களில் ரிணம், பல்லில் சீழ் இரத்தம் வருதல், பல் ஜிலு ஜிலுப்பு, பல்லில் புழுதரித்தல் முதலிய வியாதிகளை 3-4 தினங்களில் நிவர்த்தியாக்கி ஈறை கெட்டிப்படுத்தி பற்களை இறுக்கி சகல துன்பத்தையும் ஓட்டிவிடும். நெடுநாளாய் அனுபவத்திற்கு வந்தது. 4-5 வயது குழந்தைகட்குக்கூட இதை உபயோகப்படுத்தி வழக்கத்தில் கொண்டுவந்தால் ஆயுசுமட்டும் பல்லைச்சார்ந்த வியாதிகள் யாதொன்றும் அணுகாது. பெண்கள், புருஷர்கள், கிழவர்கள் யாவரும் உபயோகிக்கலாம். பல் கறுக்காது.

டப்பி 1-க்கு அணா 4; 6 டப்பி ரூபா 1-4; 10 டப்பி ரூ 2.

சுகந்த பரிமள மூக்குத்தூள்.

உலகப் பிரசித்தி பெற்றது! மகா மேன்மையானது!!

இச் சுகந்த பரிமள மூக்குத்தூளானது சில மூலிகை மருந்து முதலிய பன்னிரண்டு வகை தினுசுகளும் வாசனாதிகளும் சேர்த்து வெகு பிரயாசையுடன் செய்யப்பட்டுளது. இதில் ஒரு சிட்டிகை எடுத்து காலணா சாதாரண மூக்குத்தூளுடன் கலந்துவிட்டால் அத்தூள் முழுவதும் அதிமனோரம்மியமான வாசனைமயமாய்விடுவதுடன் அதன்காரத்தையும் நெடுநாள் பாதுகாக்கும். ஜலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், தலைநோய், ஒற்றைத்தலைவலி, மண்டைக்குத்தல், நாசியில் துர்நாற்றம், நீர்ப்பீனசம், செருப்பீனசம் முதலிய வியாதிகளும் இருந்தவிடம் தெரியாமல்பறந்துபோம்.

அதிகமாய் தூள் உபயோகிப்பவர்களிடத்து உண்டாகும் அருசியான துர்நாற்றத்தை நீக்கிச் சதா கமகமவென்று பரிமளம் வீசிக்கொண்டே யிருப்பதோடு அடிக்கடி தூள் போடும்படி தூண்டும் அபேக்ஷையை நீக்கி அவ்வப்பியாசத்தை சிறுகச் சிறுகத் தாமதப்படுத்தி விடும். இதை அநேக பிரபுக்கள் தங்கள் வீடுகளில் குடும்ப அவிழ்தமாக வைத்து உபயோகித்து வருகின்றார்கள்.

இவ்வளவு பிரபல்ய முடையதாயும், மேற்கூறிய வியாதிகளைக் கண்டிக்கக்கூடியதாயுமுள்ள ஷைமூக்குத்தூளால் பல சுகுணங்களை மென்மேலும் நிறைந்துள்ளதென அனுபவத்தில் தெரிந்துகொள்ளலாமேயன்றி எமதுமூக்குக்கு நேராக யாமே புகழ்ந்து சொல்வதில் யாது பயன்? ஒருதடவையாகிலும் பரீட்சித்துப் பார்த்தால் பிறகு இதனைக் கைவிடமாட்டீர்களென்பது திண்ணம்.

☞ ஒரு டஜனுக்குக் குறைவாக வேண்டுவோர் (அதாவது ஒன்பது புட்டி வேண்டுபவராயினும்) புட்டி 1-க்கு 4-அணாவாகவே பெற்றுக்கொள்ள வேண்டும்.

கிரயம் புட்டி 1-க்கு ரூ. 0 4 0; வி. பி. சார்ஜ் அணா-4.
கிரயம் புட்டி 12-க்கு ரூ. 2 ௮ 0; வி. பி. சார்ஜ் அணா-8.

கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.



நண்பர்காள்! தாங்கள் அநேகவித கூந்தல் தைலத்தைப் பார்த்தும் உபயோகித்தும் இருப்பீர்களாயினும் இக்கூந்தல்வளர் சுகந்த பரிமளத் தைலத்தைப்போல் எவ்விடத்திலும் பார்த்திருக்க மாட்டீர்களென்று யாம் வற்புறுத்திச் சொல்லக்கூடும் நல்லெண்ணெயைத் தடவி தலை சீவிக்கொள்வதற்குபதிலாக இத்தைலத்தை பிரதிதினம் கொஞ்சம் தொட்டு தலைக்குத் தடவி தலை வாரிக்கொண்டு வந்தால் தலைமயிர்கள் நல்ல கறுப்பாகவும், நெருக்கமாகவும், ஆலம் விழுது போலவும், கூந்தற்பனையைப் போலவும், அதிக செழிப்பாகவளரும். மயிர்க்கால்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்து நாகப்பழம்போல் கறுநிறத்தை யுண்டுபண்ணும். இதுவுமன்றி இத்தைலத்தாலுண்டாகும் பிரதான குணம் என்னவென்றால் மண்டையின் மூளைக்கொதிப்பையடக்கி மூளைக்குக் கொழுமையும் குளிர்ச்சியும் உண்டுபண்ணி, கண்ணில் நீர்வடிதல், கண் அருகல், கண் எரிவு முதலான நேத்திர விரோதங்களை நீக்கி கண்களுக்கு மிகுந்த குளிர்ச்சிதரும். நல்ல பரிமள வாசனையாயிருக்கும். ஒரு டப்பியாகிலும் பரீட்சிப்பீராக.

டப்பி 1-க்கு கிரயம் ரூபா 1. 6 டப்பியின்கிரயம் ரூபா 5.

அணுவை மலையாக்கும்

சர்க்கரையின் சத்து.

சகலரும் அச்சரியப்படும்படி நூதனமாய் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த சர்க்கரையின் சத்து ஒருதுலாமுக்கு 500 துலாம் அதாவது 4 வீசை சர்க்கரைக்குச் சமமான தித்திப்பையுண்டாக்கும். ஒரு மணங்கு ஷர்பத்தாவது வேறு எதாவதுசெய்கிறதாயிருந்தால் 4-வீசை சர்க்கரையாகிலும் கொள்ளும். அந்த 4-வீசை சர்க்கரைக்குப்பதிலாக இந்த சர்க்கரைசத்தில் ஒரு ரூபாயிடை சேர்த்தால் மேற்கூறிய 4-வீசை சர்க்கரையின் தித்திப்பை யுண்டாக்கிவிடும் 8-அவுண்ஸ் ஜலத்திலாவது காப்பித் தண்ணீரிலாவது 2-அல்லது 3-அரிசியெடைபோட்டால் போதுமானது. வியாதியஸ்தர்கட்கு இதைக்கொடுத்தால் மருந்தினால் தீராதவியாதிகூட கடவுள் கிருபையால் இந்த சத்தினால் நீங்கிவிடும். இதை உபயோகப்படுத்தினால் நெஞ்செரிவு, அதனாலுண்டாகும் சளி, தொண்டையெரிவு முதலானதும் குணமாகும். சீதபேதி, நீரிழிவு, நீரில் சர்க்கரை இருப்பவர்சள்கூட இதை உபயோகித்தால் குணமாய்விடும். மருந்து சாப்பிடும்போது பத்திய மிருப்பவர்களும், சர்க்கரை சேர்க்கக்கூடாத பத்திய மிருப்பவர்களுங் கூட இச்சத்தை உபயோகித்தால் அவர்களுக்குள்ள வியாதியையும் இதுவே நிவர்த்திசெய்யு மென்பதிற் சந்தேகமில்லை. குழந்தைகட்குப் பாலிலும் கஞ்சியிலும் உபயோகப் படுத்தலாம். ஒவ்வொருவரும் ஒரு புட்டியாவது வாங்கி பரீட்சித்து ஆனந்திப்பீர்களாக. புட்டி 1-க்கு ரூபா 1. ஒருடஜன்புட்டி ரூ 10.

மேகவெள்ளைச் சூரணம்.

இது பலகாரணங்களினு லுண்டாக்கப்படுகிற மேகவெட்டை, நீர் சுருக்கு, நீர்குத்தல், நீரெரிச்சல், நீர்தாரையிலிருந்து சீழ்ரத்தம் வடிதல், முதலியன ஆண் பெண் இருதிறத்தவர்கட்கும் 10 நாளில் ஆச்சரியப்படத்தக்க அனுகூலத்தைக் கொடுக்கும். டப்பி 1-க்கு அணு 12. 6 டப்பி விலை ரூபா 4.

சுகந்த ஸ்நானப் பொடி.

இந்த வாசனையுள்ள பொடியை பிரதிதினம் குளிக்கும்போது உடம்பிற்குத் தேய்த்துக் குளித்து வந்தால் வேர்வைநாற்றம், கற்ருழை நாற்றம், அழுக்குத் தேமல், உடம்பில் நமை, சொரி, சிரங்கு, கைகால் எரிச்சல், மேக காங்கை, மேகஊரல், கிரந்தி முதலிய தோலைப்பற்றிய வியாதிகள் யாவும் நிவர்த்தியாவதன்றி திரேகத்தில் சுகந்த வாசனை கமகமவென்று வீசிக்கொண்டே யிருக்கும். நல்ல வாசனையும், காந்தியும், லட்சுமிகரமும் ஆரோக்கியமு முண்டாகும். டப்பி 1-க்கு விலை அணு-4. 6-டப்பி ரூ. 1-4. 10 டப்பி ரூ. 2.

இந்திரிய ஸ்தம்பன மாத்திரை.

இது ஓர் அதிசயிக்கத்தக்க மருந்து. இழந்துபோன போகசக்தியை யுண்டுபண்ணி இன்பத்தைகொடுத்து அதை புருஷனின் சுவாதீனப்படுத்தி விடுகின்றது. நெடுநேரம் அதிக ஆனந்தத்துடன் போகிக்கலாம். ஒரேமாத்திரையில் குணம் தெரியும். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 1-8.

மதன சுகிர்த லேப்.

இதை சம்போகத்திற்கு 5 நிமிஷம் முந்தி கோசத்தில் தடவிபோகிக்க ஸ்திரீ புருஷாள் இருவருக்கும் அதிக இன்பமும் பிரீதியும் உண்டாவதுடன் அதிக நேரமும் சம்போகிக்கலாம். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 1-0.

வீரியவிர்த்தி லேகியம்

திரேகத்திலுள்ள சர்வ நரம்புகளுக்கும் பலம்கொடுக்கக்கூடியதும் எவ்வித நோய்களையும் ஆச்சரியகரமாய் சொஸ்தப்படுத்தக்கூடியதுமான உயர்ந்த அவிழ்தம். நமது தேசத்தில் அனேகமாய் துர்ப்பலமுடையவர்களாயும் நடக்கச் சக்தியற்றவர்களாயும் எத்தொழில்களிலும் பிரவேசிக்க பிரியமற்றவர்களாயும் வருந்துகின்றவர்கள் அநேகருண்டல்லவா? இதற்குக் காரணமோ வீரியநஷ்டமே! வீரிய நஷ்டத்தினுல் நேரிடும் விபத்துக்கள் அநேகமுண்டு. அவை யாதெனில் கண் மந்தப்படுதல், செவிகேளாதல், இடுப்பு சோர்வடைதல், முகமலர்ச்சியும் கல்வியில் மனம் சுகித்திரை முதலியவைகள் இல்லாதிருத்தலே. இந்தபயங்கரமான வீரிய நஷ்டத்தை நிவர்த்தி செய்வதற்கான அருமையான சஞ்சீவி எதுவெனில் இவ் வீரியவிர்த்திலேகியமே. இந்த லேகியத்தை கழற்சிக்காய்ப் பிரமாணம் காலை மாலை இருவேளையும் 10-நாள் சாப்பிட்டுவந்தால் பல காரணங்களினுலும் நஷ்டமடைந்த நரம்புகளின் அசக்தியை அடியோடு போக்கி இராஜகருவிகளின் நரம்புகளை அதிக பலப்படுத்தி வீரியவிர்த்தியை உண்டாக்கு மென்பதற்கு சந்தேகமில்லை. இதன் குணம் 5-நாளையில் தெரியும். பத்தியம்கிடையாது. டப்பியின் விலை ரூபா 2.

செவிநோய் சங்காரி.

இதை டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்து வந்தால் காதில் சீழ்வடிதலை நிறுத்தி வலி, குத்தல், குடைச்சல் முதலிய உபாதிகளை நீக்கும். புட்டி 1-க்கு அணு 12.

சுகபேதி மாத்திரை.

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரையில் திரேகதிடமறிந்து இரவில் போஜனஞ் செய்த 2-மணி நேரத்திற்குப் பின்பு முழுமாத்திரைகளாகவே விழுங்கிவிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொள்ளும் பட்சத்தில் காலை 6-மணிக்குள் சுகமாய் பேதியாகிவிடும். உடனே மிளகுநீர் சாதம், சூப்புசாதம், அல்லது காப்பி, ஆப்பம், ரொட்டி இவைகளை சாப்பிடலாம். இம்மாத்திரையை சிறுகுழந்தைகளுக்கு 1-மாத்திரை முதல் திரேகதிடமறிந்து முலைப்பாலில் உபயோகிக்கலாம். வாய்கசப்பு, கொமட்டல், நெஞ்சு காகரப்பு, வாந்தி, வயற்றுவலி முதலிய எவ்வித கெட்டகுணமுமிருக்காது. 25 மாத்திரை அடங்கிய புட்டி விலை அணா 4.

அஜீரணம், வயற்றுவலி முதலியவைகட்கு

சுகாதார சஞ்சீவிச் சூரணம்

இதை டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்தவரின் ஒரேநாளில் பித்தமயக்கம், அஜீரணம், வயற்றுவலி, வாய்நீர் ஊருதல், வாந்தி, வயர்பொருமல், செரியாமந்தம், வயற்றிரைச்சல், உப்புசம், புளியேப்பம், பசியில்லாமை முதலியவை நீங்கும். இதில் அறுசுவையும் இருக்கும். கெர்ப்பஸ்திரீகள், ஒருவருஷத்திய குழந்தைகள் முதல் விருத்தாப்பியர் வரையில் பயமில்லாமற் சுகமாக சாப்பிடலாம். இதற்குப்பத்தியமே கிடையாது. விலை சகாயமாயிருப்பினும் பலவிதசுகமும் கொடுக்கத்தக்கது. ஒவ்வொருகுடும்பத்திலும் சதா இருக்கத்தகுந்த அவிழ்தமே. டப்பி 1-க்கு கிரயம் அணா 12.

வில்வாதித்தைலம்.

இந்த தைலத்தால் நாலு நாள் அல்லது வாரத்திற் கொருவிசை தலைக்குத்தேய்த்து ஸ்நானம் செய்துவந்தால் 48-வித பித்தரோகங்களும் தலைச்சுழட்டல், வாந்தி, மயக்கம், மேகஊஷ்ணம், கபாலச்சூடு, வாய்நீரூறல், கைகால்களில் எரிவு மூத்திர கிரிச்சின்னங்கள் யாவுந்தீரும். டப்பி ரூபா 1-8.

மேகராஜ சஞ்சீவி எண்ணெய்.

இந்த அற்புதமான எண்ணெயை காலையில் அரைபலம்வீதம்9-நாளைக்கு சாப்பிட்டால் திமிர், மேகப்படை, தீராத சர்வமேக ரிணங்கள், ரிணங்களாயுள்ள சகல குஷ்டங்கள், கருமேகங்கள், சூலை, முடக்கு, ஸ்ரீவியாதிகள் யாவும், பெண்களுக்குண்டாகும் மேகவியாதிகள் யாவும், தந்திமேகம், மதுமேகம், கிரந்தி, மேகவாய்வு, கண்டமாலை, சதையண்டங்கள், நீர் அண்டங்கள், கைகால் வீக்கங்கள், பவுத்திரங்கள், மேகத்தால் உண்டான சகல விசித்திரமான நோய்களும சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். கடினமான பத்தியமில்லை. 9-நாளைய மருந்தடங்கிய டப்பியின் விலை ரூபா 3.

நரைமயிர் கருக்குந் தைலம்.

பாலநரை, பித்தநரை முதலியவைகளால் சிலவாலிபர்கட்குமயிர்நரைத்திருப்பதை கண்டிருக்கின்றோமல்லவா! அதனால் அவர்களுடைய அழகு குறைவுபடுவதுமன்றி மனதுக்கும் வியாகூலத்தை யுண்டாக்கும். இந்தக் குறைவை நீக்கி முற்றிலும் மனம்களிக்கச்செய்வதற்கு எற்றவண்ணம் இம்மருந்தின் முறையை மேன்மையான முறையாக செய்யப்பட்டிருக்கின்றது. இதை உபயோகித்த 2 நிமிஷத்திற்கெல்லாம் நரைமயிர் கறுப்பாவதில் சந்தேகமேயில்லை. 2 விதமருந்து அடங்கிய பாக்கெட் 1-க்கு விலை ரூபா 1.

மேகப்படை சங்காரி.

ஆண், பெண் இருதிறத்தவர்கட்கும் இடுப்பு, துடை, முதுகு, மற்றெந்த இடங்களிலும் கொஞ்சங்கொஞ்சமாய் காண்பித்து விசேஷமாகப்படர்ந்து ரூபத்தைமாற்றி நமைச்சலை உண்டுபண்ணி ஓயாமல் சொரியும்படி செய்கிற மேகப்படை, மேககாரகப்படை, வண்டுகடி முதலிய எவ்விதபடைகளையும் மூன்றேவேளையில் அதிசீக்கிரத்தில் நிவர்த்தியாக்கும். எரிச்சல், துர்நாற்றம் முதலிய கெட்டகுணங்களிராது. உபயோகிப்பவர்கட்கே இதன் பெருமை தெரியும். இம்மருந்து வாயிற்படக்கூடாது. டப்பி 1-க்கு அணா 12.

நேத்திராரோக்கிய குளிர்ச்சித் தைலம்.

நாலுநாளைக்கு ஒருதரம் இந்ததைலத்தை சூரியன் உதயமாவதற்கு முன் அதிகாலையில் தலைக்குத்தேய்த்து ஸ்நானம் செய்தால், பித்த மயக்கம், கிருகிருப்பு, வாந்தி, கண் எரிச்சல், கண்மங்கல், பிடரிவலி முதலிய வியாதிகளை கண்டிக்கும். இத்தைலத்தால் 10-ஸ்நானம் செய்வார்களாயின் கண் சாலேஸ்வரத்தையும், கன்னப்பொறியிலும், நெற்றிப் பொறியிலும் உண்டாகும், துடிப்பு, கண்களின் ரப்பை துடித்தல், புருவம் துடித்தல் முதலியவைகளையும் நீக்கும். இந்த தைலத்தின் அற்புதகுணங்கள் அநேகமுள்ளனவாதலால் ஓர்முறை பரீக்ஷித்தவர்கள் இதை என்றும் கை விடார்களென்பதுண்மை. 5-ஸ்நானத்திற்காகும் தைலத்தின் விலை ரூபா 2.

மதனசிந்தாமணி லேகியம்.

இந்த லேகியத்தை ஒருவேளைக்குக் கொட்டைப்பாக்கு அளவாக காலைமாலை இருவேளையும் சாப்பிடவேண்டியது. இந்திரியம் நீற்றல், உடைதல், தானே ஸ்கலிதமாதல் முதலிய துர்க்குணங்கள் யாவும் நீங்கி நாதமானது தன் நிலையிலிருக்கும். இடுப்பு அசதி கைகால் ஓச்சல் நிவர்த்தியாகும்; முகமும் தேகமும் நல்ல தேஜசுவுண்டாகி வலுவுபடும். தாதுகட்டும், தின்பண்டங்கள் முதலிய சகலவஸ்துவும் நன்றாய் சாப்பிடவேண்டிய பத்தியமேயன்றி நீக்குதல் கிடையாது. சகலரும் சாப்பிடக்கூடிய மேலானமுறை.

40-நாள் லேகிய மடங்கிய டப்பி விலை ரூபா 2 8 0.

சர்வ தேள்விஷ சங்காரன்.

நண்பர்காள்! ஒவ்வொருவீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்க முடியாமல் அவஸ்தைப்படுவதை யாம் அனைவரும் பார்த்து விசனமுற நேருவதைப்பற்றி யாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்து அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும் தமிழ்வைத்திய பண்டிதர்களாலும் கண்டு மதிக்கப்பட்ட சர்வதேள் விஷசங்காரன் என்னும் அவிழ்தத்தை தேள் கொட்டியவர்களுக்கு அது கொட்டியவிடத்தில் தடவ உடனே விஷம் நிவர்த்தியாய்விடும். ஒரு புட்டி தைலமானது அநேகருக்கு உபயோகப்படும். ஒரு புட்டியின் விலை அணா 12.

இருமலுக்கு மருந்து.

இந்த மருந்தை காலை மாலை மத்தியானம் ஆகிய மூன்று வேளைகளிலும் ஒவ்வொரு தேக்கரண்டி வீதம் ஒரு ஒயின் கிளாஸ் சுத்தஜலத்தில் விட்டு கலக்கி சாப்பிட்டுவந்தால் அதிக ஊஷ்ணத்தினால் உண்டாகும் இருமலை தப்பாமல் கண்டிக்கும். இதுரொம்பவும் அநுகூலமான மருந்தானபடியினால் மற்ற எவ்வித இருமல் வியாதிக்கும் இதை உபயோகித்துப்பார்க்கலாம்.

கிரயம் டப்பி 1-க்கு ரூபா 1.

கீர்த்திபெற்ற

சகல மேகராஜ சஞ்சீவி மெழுகு

இந்தக் கீர்த்தி பெற்ற இராஜசஞ்சீவி மெழுகை காலை மாலை இருவேளையும் 40-நாளைக்கு உட்கொண்டால் வெகுநாளாய் திரேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேகவாய்வு, தனுர்வாதம், முழங்கால்வாதம், குதிக்கால்வாதம், சகலமான பிடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு, ரிணங்கள், குழிப்புண்கள், புரையோடுகிற புண்கள், திமிர்வாய்வு, கைகால் விரல்களில் மேகநீர்தங்கிய நோய்கள், கிரந்தி, படைக்கிரந்தி, சிறுகிரந்தி, நுணுக்காய் கிரந்தி, லிங்கத்தில் உண்டாகும் புண்கள், வெகுநாளாய் அநேக அவிழ்தங்களை சாப்பிட்டும் தீராத வெள்ளை, மஞ்சள் வெள்ளை, சந்தி வெள்ளை, சிலந்திப்புண்கள், துடைவாழை, கொருக்குப்புண்கள், படைகள், நகக்கணுநோய் மூலங்கள், முளைமூலங்கள் முதலிய ரோகங்களெல்லாம் நெருப்பிலிட்ட பஞ்சுபோல் பறந்தோடிப்போகும். அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கி சௌக்கியத்தை உண்டுபண்ணி அதிக அநுபவத்திற்கு வந்த மருந்து. சாப்பிடுவதற்கு அருவருப்பு முதலிய கெட்டவாசனைகள் இல்லாமல் அமிர்தத்திற்கு சமானமாய் உள்ளது. கடினபத்தியங்கள் முதலியனவின்றி, தயிர், மோர், பால், நெய், கறி, பழையசாதம் முதலியவைகளுடன் சாப்பிடக்கூடியதும், பேதி, இளைப்பு, ஆயாசம் முதலியவைகளின்றி சுகமாய் வியாதிகளைக் கண்டித்து சுகப்படுத்தக்கூடிய சித்தர்முறை யென்றறிக. (ஜனோபகாரமாய் விற்கப்படுகின்றது.) 40-நாளைய மருந்தடங்கிய டப்பி ரூபா 5.

20-நாளைய மருந்தடங்கிய டப்பி ரூபா 3.

நாக்குப்பூச்சி நாசமாத்திரை.

இந்த மாத்திரையை 1 வருடத்து குழந்தைகட்கு அரை மாத்திரையும், மற்றவர்கட்கு 1 அல்லது 2 மாத்திரைகொடுத்தால் வயிற்றிலுள்ள சிறு கிருமிகள் யாவற்றும் பந்துபந்தாய் வந்துவிடும். கிரயம் டப்பி 1-க்கு அணா 6.

கோசபரிபாலனத் திலா.

இதில் கொஞ்சமெடுத்து பிரதிதினம் ஆண்குறியின்மேல் பூசிவந்தால் 2 நாளையில் கோசத்தின் சோர்வுதளர்ச்சி நீங்கி நரம்புகள் பலப்பட்டு இழந்துபோன சம்போகசக்தியை அதிகப்படுத்தும். கிரயம் புட்டி 1-க்குஅணா 12.

தாதுபுஷ்டி ஹல்வா

உயர்ந்த அம்பர் கஸ்தூரி முதலிய வஸ்துக்கள் சேர்த்து செய்யப்பட்டிருக்கின்ற இந்த ஹல்வாவை பிரதிதினம் காலை மாலை 2-வேளைகளிலும் அரைரூபாயிடையாக 20-நாள் சாப்பிட்டுவரில், கெட்ட இரத்தத்தைச் சுத்தப்படுத்தி இரத்த ஓட்டத்தத்தை கதிக்கச்செய்து இளகி தளர்ந்துபோன தேகத்தை கெட்டிப்படுத்தி இராஜகருவிகளுக்குப் பலத்தைக் கொடுத்து புருஷத்தன்மையை யுண்டாக்கிவிடும். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 5.

படர் தாமரைக்கு எண்ணெய்.

இந்த எண்ணெயை பிரதிதினம் காலையில் கால்பலம்வீதம் 7-நாள் சாப்பிட்டால் தேகத்தில் படர்ந்துவரும் படர்தாமரை நமைச்சல் சொரி இவை நிவர்த்தியாகும்; வாய்வுகள் இருந்தாலும் தீரும்; இச்சாபத்தியம்.

ஒரு அவுன்சு புட்டியின் விலை ரூபா 1.

மகா வீரியவிர்த்தினி.

16-வயது முதல் 75-வயது வரையில் பயன் தரும்.

கடலுலகில் வாழும் எழுவகைத் தோற்றத்தின்கண் மாதவத்தால் வந்த இத்தேகத்திற்கு ஜீவாத்தினம்போல் விளங்கும் நாதவிந்தானது மரத்திற்கு வித்தும் வித்திற்கு மரமுமாக ஆசாரமாயிருப்பதாம். இவ்வித வீரியமெனப் பெயர்பூண்ட விந்திற்கு நல்லகுணம் கெட்டு துர்க்குணம் வந்தவிடத்து அறிவு, விர்த்தி, தீரம், தேகபுஷ்டி, சந்தானவிர்த்தி, வல்லமை, தேக ஒளிவு, சந்தோஷம் ஆகிய யாவும் தினேதினே முற்றிலுமிழந்து அதற்கு பிரதியாக, மலடு, மூப்பு மந்தம், சபைக்கோழைத்தனம், சோம்பல், நித்திரை முதலான கெட்டகுணங்கள் ஒவ்வொன்ருய் தோற்றுகின்றனவென்பதை கல்விமான்கள் யாவரும் ஒப்புக்கொள்வார்கள் என்பதற்கு ஐயமில்லை. ஏனைய தேகசத்தென்னும் விந்திற்கு குறைவு வந்த காரணங்களையறிந்து அவைகளுக்கேற்ற பரிகாரங்களைத் தகுந்தபடி செயது சுகமடையத வறுதல்கள் வந்திருக்கும் எமது நண்பர்களுக்கும் நல்ல யௌவனப் பருவத்தில் முற்றிலும் போகசக்தியை யிழந்து வருத்தமடைந் திருக்கும் நண்பர்களுக்கும், பித்தவெட்டை, கிராணிபேதி முதலிய பல வியாதியால் மெலிவடைந்து பலவீனமடைந்திருக்கும் நேயர்களுக்கும், தங்களுடைய தேகப் பயிற்சியால் தினேதினே ஊஷ்ணமேறி விந்திற்கு ஆதாரமாகிய மூளைக்கு சூடுண்டாக்கி அதனல் நெஞ்சுலர்தல், ஞாபகசக்தியின்மை, நித்திரைபங்கம் தேக அசதி இப்படிப்பட்ட வியாதிக்குக் காரணமாகிய இராஜகருவி என்னும் மூளைக்கு அளவிற்கு அதிகமாய் சதா ஓயாமல் வேலையைத்தரும் வக்கீல்கட்கும், பாரிஸ்டர்கட்கும், வாசித்துவரும் மாணுக்கர்கட்கும், நீடித்தநாள் மனேவியாகூலத்தால் உண்டாகிய மேற்கண்ட வியாதியஸ்தருக்கும், இரத்தகாசம், ஈளை, இருமல், இரத்தம் விழுதல், விந்து ஒழுக்கு, சொற்பனஸ்கலிதம், போக ஆரம்பத்திலேயே ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், ஆகிய இவைகளுக்கும் மற்ற எந்தவிதத்திலாவது போகசக்தியற்ற நண்பர்கள் யாவரும் நமது மகா வீரியவிர்த்தினி என்னும் அவிழ்தத்தை உட்கொண்டவுடன் தன் சுபாவபலனுக்கு எண்மடங்கு பலமும் தைரியமும் சந்தோஷமும் அடைந்து பால்யர்முதல் விர்த்தாப்பியர்வரையில் கட்டாயமாக பிரதிபலனடைந்து சப்ததாதுக்களும் முறுக்கேறி கோசமாகிய ஆண்குறிக்கு போதுமான சக்திவந்து நீடித்தநாள் ஷெ தாதுகெடாமல் சுகமாக இருப்பார்களென்று நாம் நம்பிக்கையாகவும் கட்டாயமாகவும் சொல்லுகிரும்.

லோகசத்துக்களும், தங்கம், வெள்ளி, காந்தம் முதலிய ஜீவசரக்குகளையும் கொண்டுமுடிந்த பஸ்பமாகலின் இதை நீடித்தநாள் சாப்பிடவேண்டியதில்லை 10-நாளைக்குசாப்பிட்டால் போகத்தில் மும்மதவாரணம்போலும் சதா தைரியத்துடன் கவனசுத்தி குறைவின்றி யிருப்பார்கள்.

10-நாள் மருந்துள்ள புட்டி விலை ரூபா 3-8-0.

கரப்பான் எண்ணெய்.

இது அனேக உயர்ந்த சரக்குகளைச்சேர்த்து செய்யப்பட்டிருக்கின்றது. அனேகங் குழந்தைகளுக்கு தேகம் முழுவதும் அல்லது தேகத்தில் சில பாகங்களில் ரணமிருந்து அதிக தொந்தரைப் படுகிறதற்கு இந்த எண்ணெயில் ஒவ்வொருகரண்டி காலையில்மட்டும் டைரக்ஷனிற் சொல்லியபிகாரம் கொடுத்து வந்தால் 7 நாளில் சகல இரணங்களையும் ஆற்றி குழந்தைகட்கு சௌக்கியத்தையுண்டுபண்ணும். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 1.

இஞ்சிமுறப்பா.

இந்த இஞ்சி முறப்பாவில் தினந்தோறும் காலை மாலை இருவேளையும் மூன்று துண்டுவரையிலும் சாப்பிடவேண்டியது. இப்படி 20-நாள் அல்லது 40-நாள் விடாமல் சாப்பிட்டுவந்தால் பித்தாதிக்கம், பித்தத்தினால் வாய் கசப்பு, பித்தமயக்கம், பித்த எப்பம், மார் எரிவு, திரேகமுழுதும் உளைச்சல், கணுவாய்வுகள், அரோசகம், வாந்தி, அஜீரணம், எப்பம், பித்தச்சூடு முதலிய சகல வியாதிகளை நிவர்த்திசெய்வதன்னியில் மேகரோக மிருந்த போதிலும் சாந்திப்படுத்தும். இது தின்பதற்கு இனிப்பும் சிறுகாரமுங் கூடிய சமரச பக்குவமானதாயிருக்கும்; பத்தியமில்லை. டப்பி ரூபா 1-8.

பீனிசப் பௌடர்.

இந்த பௌடரில் ஒரு சிட்டிக்கையெடுத்து மூக்குத்தூள் போடுவது போல உபயோகப்படுத்தி வந்தால், மூக்கில் நீர்வடிதல், மூக்கில் துர்நாற்றம் வீசுதல், மூக்கு அடைப்பு, சிரோபாரம், மண்டைக்குத்தல், ஒற்றைத்தலை நோய் முதலியவியாதிகள் நிவர்த்தியாகும். இத்துடன் கீழ்க்கண்ட சிரரோ சங்காரத் தைலத்தையும் ஸ்நானஞ் செய்யவேண்டும். டப்பி விலை அணா 8.

சிரரோக சங்காரத் தைலம்.

இந்த தைலத்தை வாரத்திற்கிரண்டுதடவை ஸ்நானம் செய்துவந்தால் தலைவலி, ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, பீனிசம், நாசியிலிருந்து நீர்வடிதல் முதலிய வியாதிகள் 20-நாளையில் சௌக்கியமாகும். டப்பி விலை ரூ. 1.

புருஷ காம்பீர மாத்திரை.

இம்மாத்திரையை 20-நாள் காலை மாலை 2-வேளைகளிலும் வேளை 1-க்கு ஒரு மாத்திரையாக சாப்பிட்டுவரின் எவ்விதகாரணங்களினாலும் உண்டான தாது நஷ்டத்தையும் சத்துவக்குறைவையும் தேகத்தின் அசதி சோர்வு முதலியவைகளை நீக்கி இராஜகருவிகளுக்கு பலத்தைக் கொடுத்து நரம்புகளுக்கு முறுக்கேற்றி புருஷத்தன்மையை அதிகப்படுத்தும். விலை ரூ. 3-8-0.

கஷ்ட நிஷ்டூரன்.

இந்தைலத்திற் கொஞ்சமெடுத்து தேகத்தில்நோயுள்ள எவ்விடத்திலும் பூசினால் 5 வேளையில் ஆச்சரியப்படத்தக்க விதமாய் எவ்வித நோய்களையும் கண்டிக்கும். இன்னும் கை கால் முடக்கம், கணுக்களின் வீக்கம் முதலிய எவ்வித வாதங்களையும் சகல ஜன்னிதோஷம் முதலிய குரூரமான வியாதிகளையும் சீக்கிரத்தில் கண்டித்துவிடும். புட்டி 1-க்கு அணா-12.

கண்டசுத்தி மெழுகு.

இதை டைரக்ஷனிற் சொல்லியபடி இதைச் சாப்பிட்டு வந்தால் தொண்டைக்கம்மலை நீக்குவதன்னியில் இன்பமாய் பாடுவதற்கு இசைந்த குரலையுண்டாக்கிவிடும். சங்கீதவித்வான்களுக்கு இது ஓர் அருமையான ஔஷதம்; எத்தனைநேரம் பாடினாலும் குரல் கம்மாது. டப்பி விலை ரூபா-2.

காதடைப்புக்கு மருந்து.

இந்த தைலத்தில் 4 துளி எடுத்து தினம் மூன்று வேளையாக 5 நாளைக்கு காதில்விட்டு பஞ்சடைத்து டைரக்ஷனில் சொல்லியபடி செய்து வந்தால் காது குத்தல், வலி, காதடைப்பு முதலியவியாதிகள் தீர்ந்து காதோசை செம்மையாய் கேட்கும். கிரயம் புட்டி 1-க்கு அணா 12.

மகா சந்தனாதித் தைலம்.

இத்தைலத்தின் பெருமையை அதிகமாய் விவரித்தெழுதுவதை நிறுத்தி சுருக்கிக்காட்டுகிறோம். இத்தைலத்தால் வாரத்திற்கு இரண்டு ஸ்நானங்களாக 10 ஸ்நானங்கள் செய்பவர்கட்கு தீராத ஒற்றைத் தலைவலி, இரட்டைத்தலைவலி, சிரசில் எந்நேரமும் பளுவாய் இருத்தல், ஸ்திரீகள் கர்ப்பமாயிருக்கும்போது மசக்கையினாலுண்டாகும் தீராதவாந்தி, பித்தமயக்கம், பித்தபாண்டு, நாட்பட்ட பழையசுரம், குளிர்சுரம், 13 வித ஜன்னி, கழுத்திலும் நரம்புகளிலும் உண்டாகும் நோய், அஸ்திவெட்டை, அஸ்திசுரம், கபாலசூலை, கண்எரிவு, கைகாலெரிவு, சொரி, சிரங்கு நமைச்சல், பீனிசம் முதலியபலவிதரோகங்களைச் சொஸ்தப்படுத்தி தேகத்திற்கு ஒளிவையும் கவனசுத்தியையும் கண்களுக்கு நல்ல பிரகாசத்தையு முண்டாக்கும். டப்பி 1-க்கு விலை ரூபா 1-12.

மேகசஞ்சீவி எண்ணெய்.

இந்த எண்ணெயினால் தீரும் வியாதிகள் அநேகம். முக்கியமாக ஸ்ரீசஞ்சாரத்தால் உண்டாகும் வெள்ளை, மஞ்சள்வெள்ளை, இரத்தவெள்ளை, தந்தி வெள்ளை, மேக வாய்வுகளால் கைகால் பிடிப்பு, மேகவூரல், மேகச்சொரி, மேகச்சிரங்கு, மேகரிணங்கள், கொருக்கு, அரையாப்பு முதலியவைகளை ஆச்சரியகரமாய் கூடிய சீக்கிரத்தில் குணமாக்கும். மேகத்தினால் உண்டாகும் வியாதிகளில் வாதரோகதொந்தமான வியாதிகளுக்கு இது அரசனாக நினைக்கக்கூடியது. துஷ்டப் பெண்களின் வியாதியால் கஷ்டப்படும் தமதுநேயர்களையும் இப்படிப்பட்ட வியாதியிலிருந்து சொஸ்தப்படுத்த முயற்சிசெய்ய நமது நண்பர்கட்கு யாதொரு ஆக்ஷேபமின்றி இந்த எண்ணெய் ஓர் தூண்டுகோலாயிருக்கு மென்பதில் சந்தேகமில்லை. டப்பி விலை ரூபா-2.

சொர்ணாமிர்த லேகியம்.

மேற்கண்ட மேகசஞ்சீவி எண்ணெயை சாப்பிட்டபிறகு இந்த சொர்ணாமிர்த லேகியத்தை ஒவ்வொருவரும் சாப்பிட்டால் அவர்கள் மேற்கண்ட வியாதியினால் இழந்த பலத்தைப் பெறுவார்கள். இப்படி 20-நாள் சாப்பிட்டால் ஷை துஷ்ட பெண்களால் கெட்டிருந்த இந்திரியத்தை சுத்தப்படுத்தி திரேகபுஷ்டியை உண்டாக்குவதுடன் திரேகதேஜசும் உண்டாக்கும்; இதை சிறுவர்முதல் யாவரும் உபயோகித்துவந்தால் கணச்சூடு வாய்நாற்றம் கைகால் ஓச்சல் கோசநரம்புத் தளர்ச்சி இடுப்பு அசதி பித்தம் அஜீரணம் இவைகளை நீக்கி திரேகபுஷ்டி உண்டாக்கும். டப்பிவிலை ரூபா 2.

வச்சிரபீஜத் தைலம்.

இந்த தைலத்தினால் விரைவீக்கம், விரை நோக்காடு, விரை நரம்புகள் தடிப்பு, விரையை அடுத்த நரம்புகள் இழுப்பு, அடிக்கடி வீங்கியும் தளர்ந்து மாறிமாறிவரும் சுபாவநோய்கள், இன்னும் விரையைச்சார்ந்த எல்லாவித வாதநோய்களையும் கண்டித்து சௌக்கியத்தை யுண்டுபண்ணுவதில் இந்த தைலத்தைவிட சிறந்த அவிழ்தம் வேறே கிடைக்காதென்று முழுதைரியத்துடன் சொல்லலாகும். கஷ்டமான பத்தியமில்லை. டப்பியின் விலை ரூபா 2.

சூதகபந்த நிவாரண மாத்திரை.

பலகாரணங்களினால் சூதகம் நின்றிருப்பதும், கிரமந்தப்பி வருகிறவியாதிகளையும், அதனாலுண்டாகும் வயற்றுவலி, தலைநோய், தேகஉளைச்சல் முதலிய துர்க்குணங்களையும் போக்கிவிடும். டப்பி 1-க்கு விலை அணா 12.

மாஜிக்பாம்.

இந்த மாஜிக்பாம் என்னும் தைலமானது அனேக வைத்தியர்கள், டாக்டர்கள் பரிசோதித்து உலகமெங்கும் பிரசித்தி பெற்றிருக்கின்றது. தலைநோய், ஒற்றைத்தலைநோய் புறங்கழுத்து வலி இவைகளை 5-நிமிஷத்திற் கண்டிக்கும். இருமல், மார்சளி, கபம், தொண்டைநோய் இவைகளை 10-நிமிஷத்திற் கண்டிக்கும். இடுப்புநோய், பக்கசூலை, பாரிசவாயவு, மூட்டுகளின் வீக்கம், பிடிப்பு இவைகளுக்கு மூன்றுவேளை உபயோகித்தால் சௌக்கியமாகும். தேள், நட்டுவக்காலி பூரான் இவைகள் கொட்டுமிடத்தில் இந்த தைலத்தைத் தடவி நன்றாய்த் தேய்ப்பதினால் உடனே சவுக்கியமாகும். இது பசுவெண்ணெயைப்போல் கெட்டியாயும் பரிமள வாசனையுமுடையது. ஒரு புட்டி விலை ரூபா 1. 6 புட்டி விலை ரூபா 5.

அமிர்த சஞ்சீவி மெழுகு.

இந்தமகத்துவம் பொருந்திய அமிர்த சஞ்சீவி மெழுகானது கீழ்க்கண்ட வியாதிகளை அதஞ்செய்து சந்தோஷிக்கச் செய்யுமென்பது திண்ணம். இதை நமது நண்பர்கள் ஒவ்வொருவரும் பரிசோதித்து ஆனந்திப்பீர்களாக. இதனால் தீரும் வியாதிகளாவன: மேகரோகத்தால் உண்டான கைகால் பிடிப்பு, கொருக்கு, புண், லிங்கரிணம், மேகத்தால் உண்டாகும் வெடிப்பு ரிணங்கள், மேகப்படைகள், கிகச்சணுவுநோய், வெள்ளை, மஞ்சள் வெள்ளை, தந்திவெள்ளை, கிரந்தி, சிறு அல்லது பெருங்கிரந்தி, நுணுக்காய் கிரந்தி, மேகத்தால் உண்டாகும் திமிர் முதலிய சகல வியாதிகளும் பெண்களுக்குண்டாகும் யோனிப்புண், சிலந்திப்புண், துடைவாழைமுதலியவற்றை 10நாளில் அதமாக்கிவிடும்; கடும்பத்தியமில்லை. டப்பி விலை ரூபா 3-8.

நரைமயிர் கறுக்க எண்ணெய்.

இந்த எண்ணெயை பிரதிதினம் தலையில்தடவி சீவிவருவதனால் பாலயத்தில்நரைத்த எவ்வித நரையையும் மாற்றி நாகப்பழம்போல வர்ணத்தை கொடுப்பதுடன் சில நாள் தடவிவருவதனால் பிறகு எக்காலத்திலும் வெண்மையான முடிகளைக் காணவே கூடாது. கிரயம் டப்பி 1-க்கு ரூபா 1.

தாம்பூல மாத்திரை.

இந்த மாத்திரையை தாங்கள் நித்தியகாலம் போஜனஞ்செய்தபிறகு தாம்பூலம் தரிக்கும்போதெல்லாம் அத்துடன் ஒவ்வொருமாத்திரை தின்று கொண்டு வந்தால், வாதநீர் முதலியது அணுகவொட்டாமல் திரேகத்தை சரியான திட்டத்தில் இருக்கச்செய்யும். ஜலுப்பு, சீதளம், தலைபாரம் இவைகள் வரவொட்டாது; வாய் நாற்றத்தைக் கண்டித்து பரிமளத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும் இந்த மாத்திரையை கர்ப்பஸ்திரீகள் பிரதி தினம்இராக்காலத்தில் தாம்பூலத்துடன் 2-மாத்திரைவீதம் தின்றுவருவார்களாகில் திரேகத்தில் நீர்கோர்க்காமலும், பிரசவகாலத்தில் யாதொரு வருத்தமில்லாமலுமிருக்கும். பிரசவிக்கும் குழந்தைகளுக்கு கரப்பான், வாய்வு, சிரங்கு, மாந்தம் முதலான வியாதிகள் அணுகாது. டப்பியின் கிரயம் ரூ 1.

சீதபேதிச் சூரணம்.

இரத்தபேதி, சீதபேதி, சீழும் இரத்தமும் கலந்தபேதி, மலத்துடன் இரத்தம் வருதல், மூலக்கடுப்பு, அடிவயறுநோய் முதலிய இந்தவியாதியானது குழந்தைகள்முதல் பெரியோர் வரையில் யாருக்கிருந்தாலும் 3-4வேளையில் தப்பாமல் கண்டிக்கும். கிரயம் டப்பி 1-க்கு அணா 12.

ஓடுவாய்வு எண்ணெய்.

கைகால்களின் பிடிப்பு கீலுகள் பிடிப்பு கைவிரல் மணிக்கட்டுகள் பிடிப்பு அல்லது வீக்கம் திரேகத்தில் அன்றுடம் ஒவ்வோரிடத்தில் ஓடி குத்தலும் குடைச்சலும் நோயும் உண்டாக்குகிற ஓடுவாய்வு மேகவாய்வு மேகத்தாலுண்டான படைகள் யாவும் தீரும். மற்ற எண்ணெய்கள்போல வாய் கொண்டமட்டும் காண்டிகணக்காகக் குடிக்கவேண்டியதில்லை. அவரவர்கள் தேகதிடத்தின்படி தட்டுஇடை அல்லது காலணு யிடைவரையில் உள்ளங் கையில்விட்டு நக்கிச் சாப்பிடவேண்டியது. இப்படி காலை ஒரேவேளையாக 5-7-நாட்கள் சாப்பிடவேண்டியது. 1-அவுன்சு புட்டி விலை ரூபா 1.

கற்பூர சிலாசத்து பற்பம்.

இந்த பற்பமானது அன்றுடச்சூட்டை உடனுக்குடன் கண்டித்து உடம்புக்கு குளிர்ச்சியை யுண்டாக்கும்; நீர்தாரையைச் சேர்ந்த குற்றமெல்லாம் கண்டிக்கும். ஸ்திரீகளுடன் புணர்ச்சிசெய்து எழுந்தவுடன் இதில் ஒரு சிட்டிக்கை வாயில் போட்டுக்கொண்டு இரண்டுமுணர் நலலஜலம் சாப்பிட்டால் சிறுநீரானது சூடில்லாமல் ஜில்லென்றிரங்கும். 10-20 நாள் காலை மாலை தின்றுவந்தால் நாட்பட்ட சூட்டைத் தணித்து திரேகமும் கண்களும் குளிர்ச்சியுண்டாகும். புட்டியின் விலை ரூபா 1.

ஸ்கலிதரக்ஷணி.

பலயீனத்தாலும் அதிக ஊஷ்ணத்தினுலும் தூக்கத்தில் ஸ்கலிதமாய் விடுவதற்கு இம்மாத்திரைகளை உபயோகித்துவந்தால் ஊஷ்ணத்தை தணித்து எக்காலத்திலும் ஸ்கலிதமாகாமல் காக்கும். டப்பி 1-க்கு அணு 12.

ஊஷ்ண சமநாரி.

இந்த ஹல்வாவை வேளை ஒன்றிற்கு அரைரூபா இடையாக காலைமாலை 2 வேளையும் 5 நாள் சாப்பிட்டுவரில் பித்தகாங்கை, மேககாங்கை, கண் கைகால் எரிவு, தேகவரக்ஷி, சோர்வு, அசதி, சோகை, பாண்டு, நீரெரிவு, நீர்குத்தல் பசியின்மை முதலியவைகளை நீக்கித் தேகத்தை குளிரப்பண்ணி தேக திடகாத்திரத்தை யுண்டாக்கும். டப்பி 1-க்கு ரூபா 2.

சுகந்த பரிமள ஸ்நானத்தைலம்.

இந்தத் தைலத்தால் ஸ்நானம் செய்துவந்தால் தலைநோய், வரக்ஷி, சிரபாரம், பீனிசம், கண் கைகால் எரிவு, மயக்கம் முதலிய சிரசிலுண்டாகும் சகல வியாதிகளையும் நீக்கி மூளையைப்பலப்படுத்தி புத்தி தீக்ஷணியத்தையும், வியாபகசக்தியையும் அதிகப்படுத்தி தேக ஆரோக்கியத்தையும், கண்பிரகாசத்தையும், முகவஜீகரத்தையும், தேகத்தில் மினுமினுப்பையுந் தந்து தேகசக்தியை யதிகப்படுத்தி மனதிற்குக் களிப்பையுண்டாக்கும். இதுமஹா உயர்ந்த தைலம். அனுபவிப்பவர்கட்கே தெரியும். டப்பி விலை ரூபா 2.

சொரிசிரங்கு மருந்து.

இதில் கொஞ்சம் கையிலெடுத்து சொரி சிரங்கு, நமைச்சல் உள்ள விடங்களில் செம்மையாய்த் தேய்த்து 2-மணி நோத்துக்குப பிறகு குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானஞ்செய்துவிட வேண்டியது. இவ்விதம் மூன்றுநாள் காலை வேளைகளிற் செய்துவந்தால் எவ்விதமான நமைச்சல்களும், சொரி, சிரங்கு, வரட்டுச்சொரி முதலியன நீங்கி தேகஆரோக்கியமாகும். டப்பி அணு 12.

சுரமாத்திரை

இந்த மாத்திரையானது அநேகவித மூலிகைகளால் செய்யப்பட்டது இதனால் தீரும் வியாதிகளுள் அடியில் சிலவற்றை விவரிக்கின்றனம். முறைசுரம், குளிர்சுரம், பித்தசுரம், விஷசுரம், சீதளசுரம், நளிர்சுரம், அஸ்திசுரம், இருமுறைச்சுரம், மும்முறைச்சுரம், நாலாமுறைச்சுரம், தோஷசுரம், அதிசாரசுரம் முதலிய சுரங்களை இரண்டுநாட்களில் கண்டிக்கும். இம்மாத்திரையை யாதும் சந்தேகமின்றி உபயோகிக்கலாம். பத்தியவிதியும், உபயோகவிதியும் மருந்துடன் அனுப்பப்படும். புட்டி அணா 12.

மலச்சுத்தி லேகியம்.

மலச்சிக்கல் மலவரட்டு மூலச்சூடு மூலவாய்வு கெர்ப்பவாய்வு அபானவாய்வு வயற்றுவலி முதலிய ரோகங்களை விளையாட்டாகவே அன்றாடம் மலச்சிக்கலில்லாமல் நிவர்த்தியாக்கும். இதற்கு பத்தியமென்பதே கிடையாது. 5 வயது சிறுவர்கள் முதல் புருஷர்கள் கிழவர்கள் யாவரும் சாப்பிடலாம். 1 டப்பி வாங்கி பரீட்சைபார்த்தால் எப்போதும் இந்த லேகியத்தை விடமாட்டீர்கள். தின்பதற்கு இனிப்பாகவேயிருக்கும். மிகவும் கைகண்ட லேகியம். அனேகம்பேர் பரீட்சித்திருக்கின்றார்கள். டப்பி விலை ரூபா 1.

சுகந்த பரிமள

வாசனை திரவியங்கள்.

சகல சுபமங்கள முகூர்த்தங்களுக்குரிய மஹா உன்னதமான பரிமளத்தையுடைய அத்தர்களும், உயர்ந்த அத்தர்பில்லைகளும், அகக்களிப்பையுண்டாக்கக்கூடிய உயர்ந்த ஊதுவத்திகளும், பலவித வாசனைத்திரவியங்களும் நம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். நம் பரிமளசாமான்கள் முழுமையும் உயர்ந்தவைகளாகவும், கலப்பில்லாமல் அப்பட்டமானவைகளாகவுமிருக்கின்றன.

அர்கஷ்.

இது ஓர்வித சுகந்த கலவை. இதிற் கொஞ்சம் எடுத்து தண்ணீரிற் கலந்து தேகத்திற் பூசினால் மகாமேன்மையான பரிமளத்தை கொடுக்கும். சுகந்த பரிமள வஸ்துக்களில் இது பிரபுக்களால் புகழத்தக்கவஸ்துவேயாம் இதை ஒருதடவை பூசின பிறகு பிரதிதினம் ஸ்நானஞ்செய்தாலும் மூன்று நாள் பரியந்தம் தேகத்தில் பரிமளம் தங்கிரிற்கும்; ஒருபலம் சந்தனத்தில் ஒரு விராகனிடை கலந்தால் மகாமேன்மையான பரிமளத்தை உண்டாக்கிவிடும். துலா 1-க்கு விலை ரூபா 2.

வதனகாந்தி பில்லை.

இதில் கொஞ்சமெடுத்து ஜலத்தில் கரைத்து முகத்தில் பூசி 2 நிமிஷத்திற்குப் பிறகு தேய்த்துக்கழுவி ஸ்நானஞ்செய்துவர ஸ்திரீபுருஷாள் இருவருக்கும் முகத்திலுள்ள மாசு மருநீங்கி பிரகாசமும் காந்தியும் உண்டாக்கும். ஒருமாதம் உபயோகிக்கில் விகாரமான முகத்திலும் பிரகாச முண்டாகும்படிசெய்யும். டப்பி 1-க்கு கிரயம் அணா 8.

சுகந்த ஆரோக்கிய பௌடர்.

இதிற் கொஞ்சம் எடுத்து கையில் வைத்துக்கொண்டு கொஞ்சம் தண்ணீர்விட்டு இரண்டுகையினாலும் சூடுபிறக்கும்படி தேய்த்து சரீரத்தில் தேய்த்துக்கொண்டாலும், அல்லது ஸ்நானம்செய்தபின் மேற்கண்டபடி தேய்த்துக்கொண்டாலும் சரீரத்திலுண்டாகும் நாற்றங்களைநீக்கி வெகுதூலவில் இன்பமான பரிமளவாசனைவீசும். கலியாணப்பெண்களும், பிள்ளைகளும், கனதனவான்களும், பெரியோர் சிறியோர் யாவரும் உபயோகப்படுத்தினால் அதனுடைய குணங்கள் குளிர்ந்ததாகவும் சபையோர்களால் மெச்சப்படும் படியானதாகவும் இருக்கும். 1-பலம் சந்தணத்தில் ஒரு டப்பிபௌடரை கலந்துவிட்டால் எங்கும் கண்டிராத வாசனையை அநுபவிக்கலாம்.

கிரயம் டப்பி 1-க்கு அணா 6. டப்பி 12-க்கு ரூபா 4.

சுகந்த கூந்தல் தூபம்,

ஸ்நானஞ் செய்தபின் கூந்தலை உலற்றும்போது இத்தூளில் கொஞ்சம் எடுத்து நெருப்பிலிட்டு தூபவாசனையை கூந்தலுக்குப் பிடிக்க கூந்தல் கமகமவென்று பரிமளிப்பதன்றி ஸ்திரீ புருஷாள் இருவருக்கும் இன்பத்தைக் கொடுக்கும். டப்பி 1-க்கு விலை அணா 4. 6-டப்பியின் கிரயம் ரூபா 1-4.

உயர்ந்த அத்தர் தினுசுகள்.

அத்தர்களின் பெயர்.	1. நெ. † துலா 1-க்கு ரூ.	அ.	2. நெ. துலா 1-க்கு ரூ.	அ.	3. நெ. துலா 1-க்கு. ரூ.	அ.
ஈரான் அத்தர்	*35	0	*25	0	*12	0
குலாப் அல்லது ரோஸ் அ	*25	0	*12	0	3	0
அம்பர் அத்தர்	3	0	1	4	1	0
சுஹாக் அத்தர்	3	0	1	8	1	4
மல்லிகைப்பூ அத்தர்	3	0	1	8	1	0
தாழம்பூ அத்தர்	3	0	1	4	1	0
மரிக்கொழுந்து அத்தர்	3	0	1	4	1	0
சம்பங்கி அத்தர்	3	0	1	4	1	0
கஸ்தூரி அத்தர்	5	0	3	8	2	4
மருதோன்றிப்பூ அத்தர்	3	0	1	8	1	4
குங்குமப்பூ அத்தர்	4	0	2	8	2	0
வெட்டிவேர் ‡ அத்தர்	3	0	1	8	1	0
சந்தண அத்தர்	3	0	1	8	0	8
ரௌஸா அத்தர்	2	0	1	8	0	8

*இக்குறியிட்டுள்ள அத்தர் தேவையுள்ளவர்கள் நான்கில் ஒருபங்கு பணத்தை முன்னதாக மணியார்டர் செய்தால் அனுப்பப்படும்.

† ஒருதுலாம் என்பது ஒரு ரூபாயிடை.

‡ வெட்டிவேர் அத்தரில் ஒன்றிரண்டு துளி ஜலத்தில் அல்லது ஷர்பத்தில் போட்டு தினம் இருவேளை சாப்பிட்டுவர தேகத்திலுள்ள எவ்வித ஊஷ்ணத்தையும் தணித்து கற்றாழை நாற்றம் முதலிய துர்வாசனை நீங்கும்.

அற்புத சுகந்த பரிமளப் பொடி,

இந்த சுகந்த பரிமளப்பொடியானது உடம்பிலாவது, துணியிலாவது பட்டால் வாசனைவிடாது. துணிப்பெட்டிகளில் தூவினாலும், கடிதத்தில் கொட்டி மடித்துவைத்தாலும், பூச்சிகள் அண்டாது. படுக்கும் வீட்டிலும், படுக்கும் மஞ்சம் முதலானதிலும் இதைத் தூவினால் பூச்சி புழுக்கள்முதலானது அண்டாமலும் பரிமளவாசனையாயுமிருக்கும். அந்த வாசனை திரேகத்திற்குப் பட்டால் மிகுந்த ஆரோக்கியமாயும், நாசியில் ஏறுவதால் திரேகத்திலுள்ள நோய்கள் முதலானதும் சாந்தியாகும்.

டப்பி 1-க்கு விலை அணா 8 6-டப்பியின் கிரயம் ரூபா 2-8.

சுகந்தபரிமளக் கூந்தல் எண்ணெய்கள்.

கலியாணப் பெண்களும் கனவான்கள் வீட்டு ஸ்திரீகளும் பிரதிதினம் கூந்தலுக்கு உபயோகப்படுத்தக்கூடிய உயர்ந்த எண்ணெய்கள்.

மல்லிகைப்பூ எண்ணெய் 4 அவுன்சு புட்டி 1-க்கு அணா 10
சம்பங்கி எண்ணெய் 4 அவுன்சு புட்டி 1-க்கு அணா 10.
கூந்தற் பரிமளன் 4 அவுன்சு புட்டி 1-க்கு அணா 10.

சுகந்த அத்தர் பில்லை.

இந்த அத்தர்பில்லையானது உயர்ந்த யூனானி அக்கீம் பண்டிதரவர்களால் செய்யப்பட்டது. மிகுந்த வாசனையுள்ளதாயும் எத்தனை நாள் பழமைபட்டாலும் வாசனை குறைந்து கெட்டுப்போகாமலுமிருக்கும்.

ஜவ்வாது பில்லை 1-க்கு அணா 6. கஸ்தூரி பில்லை 1-க்கு அணா 4.

சுகந்த ஜவ்வாது புனுகு தினுசுகள்.

உயர்ந்த ஜவ்வாது	விராகனிடை	1-க்கு	4	0	0
,, புனுகு	,,	1-க்கு	2	0	0
,, பச்சை கர்ப்பூரம்	,,	1-க்கு	0	14	0
,, கோரோஜனம்	,,	1-க்கு	0	14	0

முகவஜீகரப் பௌடர்.

இச்சுகந்த வாசனைப் பௌடரில் கொஞ்சமெடுத்து ஜலத்தில்கலந்து முகத்தில் தேய்த்து முகத்தைக் கழுவிவிடவேண்டியது. பிரதிதினம் இவ்விதமாகச் செய்துவந்தால் முகத்தில் பட்ருகிற மேகப்படை, பரு, மாசு முதலியவற்றைநீக்கி முகவஜீகரத்தையுண்டாக்கும். கிரயம் டப்பி 1-க்கு அணா 6.

வாசனை சோப்புகள்.

இந்த சோப்புகள் பார்வைக்கு அழகாயும், மிகவும் பரிமளமாயு மிருப்பதல்லாமல் எப்போதும் வாசனை நீங்கிடாமலும் கெடாமலு மிருக்கும். இதை ஒவ்வொருவரும் உடம்பு குளிக்கும் பொழுது உடம்பில்தேய்த்து குளித்துவந்தால் என்றைக்கும் தேகத்தில் சொரி, நமைச்சல், சிரங்கு, வராமல் காப்பாற்றி திரேகத்தை மிகவும் சுத்திசெய்து வாசனைவீசும். குழந்தைகளுக்கும் தேய்த்து வந்தால் மிகவும் நல்லது.

1-நெ. 3-சோப் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூபா 1-4.
2-நெ. 3-சோப் அடங்கிய பாக்கெட் 1-க்கு ரூபா 1.
3-நெ. 3-சோப் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8.
4-நெ. 3-சோப் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 6.

தமிழ்ப் புத்தகங்களின் ஜாபிதா.

நூதன புத்தகங்கள்.

	ரூ.	அ.
உலக உற்பத்தி காண்டமும், தேவ உற்பத்தி காண்டமும், அடங்கிய பிரபஞ்சஉற்பத்தி	2	0
பதினெண்சித்தர் ஞானக் கோர்வை 2-பாகமும்	1	0
சிவவாக்கியர் 1000-பாடல்	0	8
வேமன்ன யோகீஸ்வரர் ஆயிரம் பாடலுக்கு உரை	1	0
கண்கட்டுவித்தை முதல்பாகம்	0	6
ஷை 2-ம் பாகம்	,,	6
ஷை 2-பாகமும் சேர்ந்தது	,,	10
மனமோகனக்கண்ணாடி	,,	8
ஸ்ரீராமரஹஸியம்	,,	6
அகடவிகட சம்சாரி	,,	4
கிராமமுன்சீப்பு சட்டம்	3	0
சிவில்புரோசீடுயர்கோட்	2	0
கிரிமினல் புரோசீடுயர்கோட்	2	8
இந்தியன்பினல்கோட்	3	0
கினவின்பலன்	0	4
அனுபோக ஜாதகரகசியம்	,,	12
ஷை 2-ம் பாகம்	,,	12
அஷ்டதிக்கு ஆரூடம்	,,	12
வேதாந்தசாரம்	,,	10
ரிபுகீதைத்திரட்டு குறிப்புரையு	1	0
ஔவைகுறள் சுத்தம்	,,	2
அனுபோகபிரசனை ஆரூடம்	,,	8
சோதிட பிரபஞ்சசேகரம்	,,	12
தருமசுபாகர நாடகம்	0	3
சைவ பாகசாஸ்திரம்	,,	12
மில்டேரி இந்துபாகசாஸ்திரம்	,,	8
ஜெயங்கொண்ட சௌந்தர வல்லிக் கதை	1	0
விநோதவேடிக்கைக் கதாமஞ்ச	,,	6
ஆசாரத்திரட்டு	0	4
§ திருவாரூர்க்கோவை	0	8
சாரதாசங்கீத கலியாணப்பாட்	0	6
சைவசித்தாந்தசங்கிரகம்	1	0
சிவில்அண்ட்கிரிமினல்விவகா	1	0
முகைதீன் புராணம்	2	0
சீறாபுராணம் பாட்டு உரை	4	0
சீறாபுராணம் 2-ம் பாகம்	2	0
தனிப்பாடல் மூலம் உரை	1	8
ஷை இரண்டாம் பாகம்	1	8

சைவவைணவ புராணங்கள்.

	ரூ.	அ.
ஸ்ரீமகாபாரதம் வசனம் 18-பர்வம் 4-வால்யமாக கலிக்கா பைண்ட்செய்த செட் 1-க்கு	4	8
ஷை தோல்பைண்ட் 2-கட்டட	5	8
* மேற்படி மகா பாரதவசனம் சுத்தப் பதிப்பு 100-படங்களுடன் சேர்த்து 4-வால்யமாக கலிக்காபைண்ட்செய்தது	8	0
* ஷை கிளேஸ் திக்குடிதம்	12	0
ஷை ஆதிபர்வம்தனி படத்துட	1	4
ஷை மட்டம்	0	10
விராடபர்வம்தனிபடத்துடன்	0	12
ஷை மட்டம்	0	6
வில்லிபுத்தூரார் பாரதக்கவி	3	0
இராமாயணம் 7-காண்டம் 2-வால்யமாகக் கட்டியது விசித்திரப் படங்களுடன்	5	0
ஸ்ரீமத்கம்பராமாயண வசனம்	1	12
ஷை ஐதீகப்படி படத்துடன்	4	0
உத்தராராமாயணம்	0	6
சுந்தரகாண்டம் உரையுடன்	2	0
கந்தபுராணவசனம்	1	12
கந்தபுராணம் ஐதீகப்படி படத்	3	8
கந்தபுராண வசனம் படத்துடன் உபதேச காண்டமும் சேர்த்து 2-வாலியமாக	5	0
பெரியபுராணவசனம் 72-படங்களுடன்	1	8
ஷை வேறுபதிப்பு உயர்ந்தது	2	8
திருவிளையாடற்புராணம் 64-படங்களுடன்	1	8
ஷை வேறுபதிப்பு உயர்ந்தது	2	8
திருவிளையாடல்பாட்டு	2	0
பாகவதவசனம்	1	12
ஷை உயர்ந்தது படத்துடன்	3	8
ஷை 60பவுன் கிளேஸ்கடிதம்	6	0
மேற்படி தசமஸ்கந்தம் தனி	1	4
இராமலிங்கபிள்ளை திருவருட்பா 6-திருமுறைகளடங்கிய	2	8
மேற்படி கிளேஸ் கடிதம்	3	8
மேற்படியார் திருவருட்பாத்திரட்டு மூலமும் பொழிப்புரை	1	0
திருவருட்பாத்திரட்டு மூலம்	0	8

§ திருவாரூர்க்கோவையேன்பது சோழநாட்டிலுள்ள திருவாரூரின்கண் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும் தியாகராஜப் பெருமான்மீது சைவ-எல்லப்ப நாவலாவர்களால் இயற்றப்பட்டது. விலை அணா 8.

யாழ்ப்பாணபெரிய பேரகராதி	3	8
நாலாயிரப்பிரபந்தம்	2	0
விநாயகபுராண வசனம்	2	0
விநாயகபுராணம் உபாசனகாண்டம் செய்யுள்	2	0
விநாயக மான்மியம்	1	0
விநாயக பராக்கிரமம்	1	0
சுப்ரமணிய பராக்கிரமம்	1	4
பட்டணத்தார் பாடல் சுத்தம்	0	3
பட்டணத்தார் பாடல் உரை, பட்டணத்தார் புலம்பல்உரை, பத்திரகிரியார்புலம்பல் உரை	1	2
திருஞானசம்பந்தர் தேவாரம்	1	12
திருநாவுக்கரசர் தேவாரம்	1	3
சுந்தரமூர்த்தி தேவாரம்	0	13
ஷை மூவர் அடங்கன்முறை	3	0
மேற்படி மூன்றுடன் திருவாசகம் சேர்ந்தது	3	8
மேற்படி ஸ்தலமுறை தேவார	6	0
அகஸ்தியர் தேவாரத்திரட்டு திருவாசகம் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு யாவும் கூடியது	1	12
திருவாசகம் பாக்கெட்சைஸ்	0	10
தாயுமானசுவாமி பாடல் பதவுரையுடன் கிளேஸ்கடிதம்	3	8
தாயுமானசுவாமிபாடல் சுத்தப்	0	12
மஸ்தான் பாடல் சுத்தம்	0	12
மஸ்தான்பாடல் மூலம்உரை	2	0
பக்தவிஜயம் படத்துடன் 6-தாசர்களுடையது திக்குகடிதம் முதல் பாகம்	2	0
மேற்படி படத்துடன் மட்டம்	1	0
மேற்படி படமில்லாதது	0	12
மேற்படி 2-ம் பாகம்	2	0
ஷை 3-வது 4-வது பாகம்	1	8
திருவாரூர்க்கோவை	0	8
ஆசாரத்திரட்டு	0	4
அருணசலப்புராணம் உயர்ந்த பதிப்பு படத்துடன்	1	0
மேற்படி வேறு	0	12
மேற்படி மட்டம்	0	3
பட்டணத்தார்புராணம் உயர்ந்தபதிப்பு மூலமும் உரையும்	1	8
சங்கீதஸ்வரபூஷணி	0	10
மேற்படி 2-ம் பாகம்	1	0

ஸ்ரீகருடபுராணம் படத்துடன்	0	8
சடாட்சரமாரல் சக்கரத்துடன்	0	2
பஞ்சதசப்பிரகரணம்	1	0
பன்னிரண்டு நிகண்டு	0	4
பதினேராவது நிகண்டு	0	$1\frac{3}{4}$
பன்னிரண்டு திவாகரம்	0	3
சூடாமணிநிகண்டு 12-தொகுதியும் கிளேஸ் கடிதம்	1	4
மேற்படி 10-நிகண்டுவரையில்	1	0
மேற்படி 11-12-வது தனி	0	8
கெருடப்பத்து மூலம் உரை	0	2
கணக்கதிகாரம்	0	2
சித்தூர் தீர்ப்பு உயர்ந்தது	0	5
நிஷ்டானுபூதி	0	3
கோலாட்டப்பாட்டு	0	3
இல்லற சாரசங்கிரகம்	0	6
பெண்மதிமாலை	0	4
மில்டேரி இந்து பாகசாஸ்திரம்	0	8
ஆர்ட் ஆப் கூக்குறி	0	6
இந்துதேச கூக்குறி இங்கிலீஷ் தமிழ் கலிக்காபைண்ட்	1	0
விவேகசிந்தாமணி மூலம்	0	1
மேற்படி உரையுடன்	0	2
மேற்படி 2-ம் பாகம்	0	4
நாலுபாஷை ஒக்கபில்லேரி	0	2
இரண்டுபாஷைஒக்கபில்லேரி	0	$1\frac{3}{4}$
கோலப்புத்தகம்	0	4
15-புஸ்தகம் சேர்ந்த அலங்காரச்சிந்து	0	3
20-புஸ்தகம் சேர்ந்த சில்லரைக்கட்டடம்	0	3
ஜாலக்கண்ணுடி 10-பாகம்	0	3
150 புஸ்தகங்களடங்கிய சில்லரைக் கட்டடம்	1	8
திருமந்திரம் 3000	1	8
சந்தன நூல்சாஸ்திரம் பெண்குறியடங்கியது	0	2
கடற்கட்டு மீன்படமந்திரம்	0	2
திருப்புகழ் சுத்தப்பிரதி	0	3
மேற்படி மட்டம்	0	$1\frac{1}{2}$
வே. பிள்ளையின் நீதிநூல்	0	4
மாதர்நீதி	0	6
அழகர் வர்ணிப்பு	0	2
கார்வண்ணமாலை	0	$1\frac{3}{4}$
காமன்பண்டிகை	0	$2\frac{3}{4}$
பழனியாண்டவர் ஜாவளி	0	1
சிங்கார ஜாவளி	0	1

கதை புஸ்தகங்களின் விபரம்.

அராபிநைட்ஸ்கதை 3-வால்யம் ஒரேசட்டடம் கலிகோ	2	8
மேற்படி தோல்பைண்ட்	1	0
பாரிஸ்கதை கலிகோபைண்ட்	2	0
நூதனமாயச்சிட்டிருக்கும் ஜெயங்கொண்ட சௌந்தரவல்லிக்கதை கலிக்காபைண்ட்	1	0
மகிமைபொருந்தியமைனுவதிக்	0	12
தக்காணத்துப்பூர்வகதை	1	2
பூர்வகாலக்கதை	0	12
மத்தியகாலக்கதை	0	14
விசாலாக்ஷி (நாவல்)	1	0
ஜீவரத்னம்(நாவல்)2-பாகங்கள்	1	8
மனமோஹினி (நாவல்)	1	0
கமலினி (நாவல்)	0	10
பரிமளாங்கி (நாவல்)	0	4
இராஜாம்பாள் (நாவல்)	0	12
புத்தாது திவ்ய சரித்திரம்	0	12
விக்டோரியா மகாராணியார் சரித்திரம் 28 படங்களுடன்	1	0
சுந்தராங்கி	0	6
மனோரஞ்சனி	0	12
பங்கஜவல்லி	0	8
மோஹனசுந்தரி	0	6
விநோதவேடிக்கைகதாமஞ்சரி	0	6
குணபூஷணிகதை	1	0
அற்புத பூலோகரம்பை கதை	1	0
பதிவிரதைகள் சரித்திரம்	0	12
இராஜவம்ச பரம்பரை	0	10
உலகவிசித்திரக்கதை	1	0
திரிலோகமோகனாங்கி கதை	1	0
விநோதரசமஞ்சரி	0	12
சாரங்கதரன்கதை	0	3
பிரதாபமுதலியார் சரித்திரம்	1	0
உருக்குமாங்கத சரித்திரம்	0	2½
விக்கிரமாதித்தன் கதை	0	8
ஷை கிளேஸ் கடிதம்	1	4
இராமர் அஸ்வமேதயாகம்	0	8
ஷை படத்துடன்	1	0
சார்தர்வேஸ்கதை	0	5
தர்மர் அஸ்வமேதயாகம்	0	3
32-பதுமை கதை	0	3
புஷ்பலீலாவதிக்கதை	0	3
பன்னிரண்டு மந்திரிகதை	0	2½
விவேகசாகரம்	0	3
தத்திநாமா கிளிக்கதை	0	2½
பஞ்சபாண்டவர் வனவாசம்	0	3
ஷை படங்களுடன்	0	8
காத்தவராயன் கதை	0	2½
கோவிலன் கதை	0	1¾
சித்திராபுத்திரன் கதை	0	1¾
ஆரவல்லிசூரவல்லிக்கதை	0	1¾
சிறுத்தொண்டன்கதை	0	1¾
நல்லதங்காள்கதை	0	1¾
அரிச்சந்திரன்கதை	0	1¾
தென்னுல்ராமன்கதை	0	1¾
பேசாமடந்தைகதை	0	1¾
மயிலிராவணன்கதை	0	1¾
சதகண்டராவணன்கதை	0	1¾
தேசிங்குராஜன்கதை	0	1¾
பஞ்சதந்திரக்கதை	0	1¾
புரூரவச்சக்கிரவர்த்திகதை	0	1¾
நளச்சக்கிரவர்த்திகதை	0	1¾
மதுரைவீரன்கதை	0	1
நாலுமந்திரிகதை	0	1
அவிவேகபூரண குருகதை	0	1
தமிழறியும்பெருமாள்கதை	0	1
கடன்பட்ட கந்தன்கதை	0	1

கீர்த்தனை புஸ்தகங்கள்.

பாரதக் கீர்த்தனை	3	0
வேதநாயகம்பிள்ளை கீர்த்தனை	0	10
மேற்படி மட்டம்	0	4
இராமாயணக் கீர்த்தனை லெத்தகிராப் படங்களுடன்	1	4
மேற்படி மட்டம்	0	6
மீனாட்சியம்மன் கலியாணக்கீர்	0	6
இராமதாஸ் கீர்த்தனை	0	3
பராங்குசதாசர் கீர்த்தனை	0	2
சின்னசாமிதாஸர் கீர்த்தனை	0	2
அச்சுததாசர் கீர்த்தனை	0	2½
கபீர்கமால்தாசர் கீர்த்தனை	0	1
நந்தனார்கீர்த்தனைபடத்துடன்	0	10
மேற்படி மட்டம்	0	2½
தியாகராஜர் கீர்த்தனை	0	2
பழனியாண்டவர் கீர்த்தனை	0	2
சுப்ரமண்யர் கீர்த்தனை	0	2
ருக்மணிகல்யாணக் கீர்த்தனை	0	2
சுப்பராமையர் பதம்	0	2
மாம்பழக்கவிராயர் கீர்த்தனை	0	2
முத்துதாண்டவர் கீர்த்தனை	0	2
சிறுத்தொண்டநாயனார்கீர்த்த	0	2
கவிக்குஞ்சரப்பதம்	0	12
ஆஞ்சநேயர் கீர்த்தனை	0	2

வைத்திய புத்தகங்கள்.

ஜீவரட்சாமிர்தம்	3	0
குணவாகடம்	0	2
செந்தூரம் 300	0	2
பரிபூரணம் 400	0	2
குருநாடி 235	0	2
பூரணசூஸ்திரம் 216	0	2
வைத்தியரத்னச்சுருக்கம்	0	2
சிமிட்டு ரத்னச்சுருக்கம்	0	2
கன்மகாண்டம் 300	0	2
அகஸ்தியர் பெருநூலாகியநாலு காண்டவைத்தியம்	0	12
அகஸ்தியர் ஜாலம் 200	0	2
இராஜவைத்தியபோதினி	0	12
ஆத்மரட்சாமிர்தமென்னும்வைத்தியசாரசங்கிரகம் கிளேஸ்	1	8
ஷை மட்ட கடிதம்	0	8
நோயில்லாவாழ்வு	0	12
கருவூரார்பலதிரட்டு 300	0	2
கொங்கணர்கடைக்காண்டம்	0	2
வைத்தியசதகம்	0	1½
சட்டமுனிஞானம்-200	0	2
சிகிச்சாசாரசங்கிரகம்	1	4
சுப்பிரமணியர்ஞானம் 200	0	2
வைத்தியானுகூலஜீவரட்சணி	0	8
18-சித்தர்நாடிசாஸ்திரம்	0	6
18-சித்தர் சில்லரைக்கோர்வை	0	12
பதார்த்தகுண சிந்தாமணி	0	8
ஷை உயர்ந்தது	1	8
புலிப்பாணிவைத்தியம் 500	0	2
புலிப்பாணி பலதிரட்டு ஜாலம்	0	2
ஷை உரையுடன்	1	0
போகர் 7000 பாடல் கலிக்கா	1	8
மேற்படி 700	0	4
மலை அகராதி	0	4
மாட்டுவாகடம் சக்கரத்துடன்	0	12
அசுவ சாஸ்திரம்	0	10
மேற்படி இரண்டும் சேர்ந்தது	1	4
பார்வதிபரணியமென்னும்விஷவைத்திய சிந்தாமணி	0	12
வைத்தியசிகாமணி இங்கிலீஷ் தமிழ் 1000-முறைகளுடன்	3	8
பாக்கெட்வைத்தியம்	0	12
திருநேத்திர சிந்தாமணி	0	5
மூலிகை மர்மம்	0	8
சரீரசாஸ்திரம்	,,	8
மணிமந்திர வைத்தியசேகரம்	1	0
வைத்திய அகராதி	0	8
ஷை கிளேஸ	1	0
வைத்திய கைமுறை	0	8
வைத்திய அரிச்சுவடி	0	2
அனுபோகவைத்திய பிரம்மரகசியம் 1-முதல் 8-காண்டம் வரையில் ஒருகட்டடம்	3	0
ஷை தனித்தனிகாண்டம்	0	8
வைத்தியாமிர்தபோதினி	0	10
தற்காலவைத்தியபோதினி	0	8
வைத்தியசந்தான சிந்தாமணி	1	4
ஞானவெட்டி கிளேஸ்	1	0
ஷை மட்டம்	0	6

சோதிட புஸ்தகங்களின் விபரம்.

சுகர்நாடி	1	4
சுக்கிரநாடியென்னும் சோதிட சிகாமணி திரிகாலகணிதம்	3	0
சப்தரிஷிவாக்கியம் 1021பாட	1	0
மேற்படி 5500 பாடல்	4	0
பீமகவி	0	12
சோதிடசந்திரநாடி	0	10
சோதிடபிரபஞ்சசேகரம்	0	12
புலிப்பாணிசோதிடம் 300	0	8
காக்கேயர்நாடி	0	12
கந்தர்நாடி	0	8
குமாரசாமியம்	0	8
ஜாதகசிந்தாமணி	0	6
இராமதேவர்சோதிடம் ரேகை சாஸ்திரமுமடங்கியது	0	6
புஜண்டர்நாடி	0	6
சகாதேவர்சாஸ்திரம்	0	4
சோதிடகளஞ்சியம் கிளேஸ்	0	8
ஜாதகஅலங்காரம் சுத்தப்பிரதி	0	10
மேற்படி மட்டம்	0	4
ஜாதக அலங்காரம் உரையுடன்	1	8
ஷை மட்டகடிதம்	1	0
பிருஹஜ்ஜாதகமென்னும் மங்களேஸ்வரிய ஜோதிடநூல்	1	4
வீமேசுரஉள்ளமுடையான்	0	4
சூடாமணிஉள்ளமுடையான்	0	8
பெரியவருஷாதிநூல்	0	4
சிறிய வருஷாதிநூல்	0	2
போகர் பஞ்சபட்சி உரை	0	12
ரோமரிஷிவிஞடிபஞ்சபட்சி	0	3
ஷை உரையுடன்	0	8
அகஸ்தியர் பஞ்சபட்சி	0	2
ஷை உரையுடன்	0	8

சுந்தரசேகரம்	0	8
மரணகண்டிசோதிடம்	0	2
தக்ஷிணாமூர்த்திஜாலம்	0	2
ஜீவோற்பத்திசிந்தாமணி	0	2
சோதிட அரிச்சுவடி	0	2
மேற்படி 2-வது பாகம்	0	2
மணையடிசாஸ்திரம்	0	2
அனுபோகபிரசனை ஆரூடம்	0	8
சோதிடப்பிரகாசம்மூலம்உரை	1	0
சோதிட சூத்திர விளக்க வினா	0	6
சோதிடமர்ம சாஸ்திரம்	0	8
நவகண்ட ஆரூடம்	0	8
ஆரூட சேகரம்	0	12
சோதிட நூலாதாரம்	0	4
சோதிட பாலபாடம்	0	8
சோதிட கோட்சாரசிந்தாமணி	0	12
ஸ்ரீ புருஷலட்சணகுறி சாஸ்திர	0	12
நஷ்டஜாதக கணிதம்	0	8
ஜாதககணிதாமிர்தம்	0	2
சரநூல்சாஸ்திரம்	0	1¾
களவுகாணும் சாஸ்திரம்	0	4
பெண்கள் ருதுஜ்னன ஜாதகம்	0	4
சோதிடபாலசிட்சை	0	6
சகுனபலன்	0	4
கருவூரார்மாந்திரீகஅட்டமாசித்	0	4
ஜாதகபாரிசாதம்	0	10
தொடுகுறி சாஸ்திரம்	0	¾
அங்கக்குறி சாஸ்திரம்	0	1
வால்மீகர் ஆரூட சாஸ்திரம்	0	¾
கெவுளி சாஸ்திரம்	0	1
அஸ்தக்குறி சாஸ்திரம்	0	2
ருதுசாஸ்திரம்	0	1
சகலதோஷநிவர்த்தி	0	1
பாலக்கிரகதோஷநிவர்த்தி	0	1

வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்கள்.

ஞானவாசிஷ்டம் மூலம் உரையும் நூதனகருத்துரையுடன்	3	8
மேற்படி வசனம்	1	8
மநுதர்மசாஸ்திரம்	3	8
வேதாந்தகட்டளைகொத்து	0	8
கைவல்லியம்நவநீதவிருத்தியு	2	0
மேற்படி பொழிப்புரை	0	8
பகவத்கீதைவசனம்படத்துட	1	4
நாநாஜீவவாதக்கட்டளை குறிப்புரையுடன்	0	4
வேதாந்தசாரம் வினாவிடை	0	10
சித்தாந்த பிந்து	0	10
திருக்குறள்மூலமும் தெளிபொருள் விளக்கமென்னும்உரை	2	0
மேற்படி மட்டம்	0	8
*ஷை பரிமேலழகர் உரை	6	0
நைடத மூலம்	0	12
மேற்படி உரை	1	4
மேற்படி மட்டம்	0	8
நைடதம்விரிவுரை	1	12
மேற்படி திக்குகடிதம்	2	8

அம்மானை தினுசுகளின் விபரம்.

மகாராணி அம்மானை	0	12
அரிச்சந்திரன் அம்மானை	0	8
மதுரைவீர அம்மானை	0	8
விராடபர்வ அம்மானை	0	5
புவனேந்திர அம்மானை	0	4
வைகுந்த அம்மானை	0	3
புலந்திரன் தூது	0	2½
கிஷ்டன் தூது	0	2
விறலிவிடு தூது	0	2
அல்லியரசாணிமாலை	0	2½
அபிமன்னன் சுந்தரிமாலை	0	2½
பவளக்கொடிமாலை	0	2
புலந்திரன்களவுமாலை	0	2
அபிமன்னன்சண்டை	0	5
கர்ணன் சண்டை	0	2
கான்சாய்ப்சண்டை	0	2
பர்மாசண்டை	0	4
துரோபதைகுறம்	0	2
இரங்கர் மருத்துவம்	0	2
ஏகாதசிமருத்துவம்	0	2
கருப்பண்ணபிள்ளை ஒப்பாரி	0	2
வித்துவான் குறம்	0	1
மின்னொளியாள் குறம்	0	2
மாதர் ஒப்பாரி	0	1
மன்மதன் ஒப்பாரி	0	2
கோவிந்தசாமி ஒப்பாரி	0	2
பூசாவிப்பாட்டு	0	3
பழமொழித்திரட்டு	0	3
குற்றாலக் குறவஞ்சி	0	2
சல்லாபலாவணி எரிந்த கட்சி எரியாத கட்சி	0	4
சவால் லாவணி	0	3

நாடக விலாச புஸ்தகங்கள்.

அப்பாவுபிள்ளை பாடிய சத்திய பாஷை அரிச்சந்திர விலாசம் நூதன படங்களுடன்	1	8
ஷை கிளேஸ் கடிதம்	2	8

மேற்படி சித்திராங்கி விலாசம்	0	6
மேற்படி இந்திரசபா	0	3
மேற்படி பத்மினிசபா	0	3
மேற்படி பவழேந்திரசபா	0	3
சுந்தரராவ் இந்திரசபா	0	1½
பாலாமணி இந்திரசபா	0	1½
டம்பாச்சாரிவிலாசம்	0	12
வெங்கடராம அரிச்சந்திரவிலா	0	10
இரங்கபிள்ளை அரிச்சந்திரவி	0	8
அரிச்சந்திரவிலாசம்	0	6
இரணியவிலாசம் நூதனம்	0	10
படுதோஷிவிலாசம்	0	12
பார்வதி சகுந்தலா	0	8
மார்க்கண்டேயர் விலாசம்	0	3
சகுந்தலை விலாசம்	0	2½
தருமாங்கத விலாசம்	0	4
மன்மத விலாசம்	0	2
பாரத விலாசம்	0	2
நச்சுப்பொய்கை	0	2
அர்ச்சுனன் தபசு	0	2½
துரோபதை வில்வளைப்பு	0	2½
நீதிநெறிஅரிச்சந்திரநாடகம்பட	1	8
மூக்கவேளார் நவரசசங்கீத அரிச்சந்திரநாடகம் படத்துடன்	1	8
சிவசாமிஅரிச்சந்திர நாடகம்பட	1	0
தரும சுபாகர நாடகம்	0	3
மெய்யரிச்சந்திர நாடகம்	1	8
சத்தியவாக்கு நாடகம்	1	0
இரணிய நாடகம்	0	8
சதாரம் நாடகம்	0	6
பவளக்கொடி நாடகம்	0	6
தமயந்தி நாடகம்	0	3
வீரகுமார நாடகம்	0	3
வன்னியநாடகம்	0	8
பொன்மரத்து நாடகம்	0	8
பெரிய ஒட்டநாடகம்	0	3
அரிச்சந்திர நாடகம்	0	6
பதினெட்டாம்போர் நாடகம்	0	3
கோவில நாடகம்	0	5

சதகம் அந்தாதி முதலியது.

வைராக்கிய சதகம்	0	3
எம்பிரான் சதகமூலம்	0	1
மேற்படி உரையுடன்	0	2
கைலாசநாதர் சதகம்	0	1
தொண்டமண்டல சதகம்	0	1½
வடவேங்கடநாராயண சதகம்	0	1
மணவாளநாராயண சதகம்	0	1
குமரேசர் சதகம்	0	1
அறப்பளீசர் சதகம்	0	1
தண்டலையார் சதகம்	0	1¾
கோவிந்த சதகம்	0	1½
கோதண்டராமசதகம்	0	1½
அண்ணாமலை சதகம்	0	1½
அருணகிரியந்தாதி உரை	0	2
மேற்படி மூலம்	0	1
அபிராமியந்தாதி	0	1
சரஸ்வதியந்தாதி	0	1
ஆறெழுத்தந்தாதி	0	1
கடவுள் அந்தாதி	0	1
முருகரந்தாதி	0	1
திருவேங்கடமாலை உரை	0	2
மேற்படி மூலம்	0	1
வராகிமாலை	0	¾
பார்த்தசாரதிமாலை	0	1
நமசிவாயமாலை	0	1
முத்துகுமாரசாமிபிள்ளைதமிழ்	0	2
கந்தர்சஷ்டி கவசம்	0	1
சிவப்பிரகாசக்கட்டளை	0	1
சிங்காரஜாவளி	0	1

சில்லரை புஸ்தகங்கள்.

அரிச்சுவடி	0	¾
எண்சுவடி	0	¾
கெட்டி எண்சுவடி	0	2
இலக்கம்	0	¾
சேந்தன் திவாகரம்	0	¾
ஆத்திசூடி அர்த்தம்	0	1
முதல் நிகண்டு	0	¾
வாக்குண்டாம்	0	1
ஏணியேற்றம்	0	1
விடுகவிமஞ்சரி	0	1
முருகர் ஒயிற்கும்மி	0	1
காவடிச்சிந்து	0	1
நீதிசாரம் மூலம் உரை	0	1
நீதிவெண்பா	0	1
கஜேந்திரமோட்சம் தமிழ்	0	¾
நாசுகேது சரித்திரம்	0	1
உடலறிவிளக்கம்	0	1
கூளப்பநாய்க்கன்காதல்	0	1
அரிச்சந்திரன் கும்மி	0	1
4-மந்திரிகும்மி	0	1
தும்மனூல் சாஸ்திரம்	0	1
மாரியம்மன் தாலாட்டு	0	1
மதுரைவீரன்கும்மி	0	¾
நெஞ்சறிவிளக்கம்	0	1

நூதன புஸ்தகங்கள்.

மில்டேரி இந்து பாகசாஸ்திரம்.

அறிஞர்காள்! மானிட ஜென்மமெடுத்த நாம் எவ்வளவோ பிரயாசை யும் தேகக்கஷ்டமுமெடுத்து சம்பாதிப்பதெல்லாம் சாண்வயிற்றுக்காகவே யன்றி வேறல்ல. அந்த வயிற்றை நிரப்புவதை ஒழுங்கீனமின்றி மனதிற்குத் திருப்தியாகும்படி காலபேத சமயமறிந்து அறுசுவைகளோடுங் கூடிய நல்லு ணவுகளைப் புசித்துவந்தால் நெடுநாள் ஜீவித்திருக்கவும் ஜீவநாள் வரையில் அழியாத தேகவல்லமை பெற்றிருக்கவுங்கூடும். அவ்வுணவுகளில் "மாமிசம் மாம்சத்தை விருத்திசெய்யும்" என்கிறபடி இப்பிரபஞ்சத்தில் பெரும்பாலார் மாம்சபக்ஷணிகளாகவே யிருக்கின்றனர். அவர்கள் மாம்சத்தை நன்ருய் சமையல்செய்து புசிக்கும் பக்குவத்தைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு அக்பர்பாட்சா, சிவாஜி, ஸரபோஜிமகாராஜாக்களும், இன்னும் அனேக பிர புக்களும் ஆவலோடு உருசியுடன் புசித்த அனேக முறைகளும், சுலபமான சிலவில் விசேஷ உருசியைத் தரத்தக்க பாகங்களும், மஹம்மதியர்களது சில அருமையானபாகங்களும், மாம்ஸபட்சணம் செய்யாதவர்கட்கு உபயோக மாகும்படி அரிசி, பருப்பு, ஜலம் இவற்றின் சுத்திகளும், மல்லிகைப்பூ வாசனை அன்னம், வெங்காயத்தாளித அன்னம், மல்கோபாப் பழப்புலவு, பகாரா புலவு முதலிய சைவமுறைகளும், துவையல் வகைகள், ஊறுகாய் வகைகள், தித்திப்புவகைகளில் பூரி, பூந்தி, இலட்டுகம், தேங்குழல், ஹல்வா முதலிய பலகாரவகைகளும், பாயசம், சர்பத்துவகைகளையும் பலவரியநூல் களினின்று தெள்ளிய வசனநடையில் எழுதி சற்று வாசிக்கத்தெரிந்த பெண் டுகள் முதல் ஒருவரைக் கேட்காமலே பாகங்களைச் செய்துகொள்ளும்படி பிழையின்றி அச்சிட்டுள்ளது. விலை அணு 8. வி. பி. சார்ஜ் அணு 3.

ஜெயங்கொண்ட சௌந்தரவல்லிக்கதை.

ஆண்பெண் முதலிய சகலரும் மிகவேடிக்கையாக அகமகிழ்ந்து வாசிக் கும்படி செவ்விய தமிழ்நடையில் எழுதப்பட்டஓர் அருமையான கதை. கதைபடிக்க அவாக்கொள்வோர் இதைபடிக்குந்தோறும் சந்தோஷக்கடலில் மூழ்கி ஆனந்தங்கொள்வாராயினும் முடிவில் தெளிந்த ஞானத்தையும் பெறு வார்களென்பது திண்ணம். ஸ்திரீகள்கூட இதை வாசிப்பார்களாயின் அவர் கள் மனம் நிலைப்பட்டுத் தங்கள் கணவர்கள்மீது நீங்காவிசுவாசமும் அன்பும் வைத்து அவர்களைச் சந்தோஷிப்பித்து தாங்களு மவர்களால் களிப்படை வதே கடமையென மதித்து உலகத்தில் நல்லவர்களென்று பெயரெடுக்க முயற்சிப்பார்கள். கதையின் மூலமாகவே பல அருமையான நீதி விஷயங் களை அற்புதமா யெடுத்துக்காட்டி யுள்ளது. முதற் பக்கம் படிக்க ஆரம்பித் ததும் புஸ்தகம் முடியும்வரையில் அதைக் கீழேவைக்க மனம்வராது.

விலை ரூபா 1. வி. பி. சார்ஜ் அணு 4.

ஆசாரத் திரட்டு.

இது ஓர் அருமையான இந்து சாஸ்திரம், இந்துக்களாகிய நாம்பிரதி தினம் நடந்துகொள்ளவேண்டிய விதிகள் நேமநிஷ்டைகள், அனுஷ்டான ங்கள் முதலிய சுமார் 200-விதிகட்குமேல் அடங்கியுள்ளது. சகலரும் அநுஷ் டிக்கவேண்டிய நல்லாசார ஒழுக்கங்களை பெரிய வடமொழி நூற்களிலிருந்து மொழிபெயர்த்து ஆண், பெண் முதலிய பலரும் வாசிக்கும்படி தமிழ் வசன நடையி லச்சிட்டுள்ளது. விலை அணு 4, வி. பி, சார்ஜ் அணு 2.

விநோத வேடிக்கைக் கதாமஞ்சரி.

எல்லாம் சிரிப்பு எல்லாம் வேடிக்கை. வாங்கி வாசியுங்கள்.

ஆண் பெண் முதலிய சகலரும் மிகவேடிக்கையாக வாசிக்கும்படி தமிழ்நடையில் நூதனமாயச்சிட்டுள்ளது. இதைப் படிப்பவர்கள் வயறெல்லாம் புண்ணாகும்படி கீழேவிழுந்து விழுந்து சிரிப்பார்கள். படிக்கப்படிக்க மிக வேடிக்கையாயிருக்கும்.

விலை அணா 6; வி. பி. சார்ஜ் அணா 3.

தருமசுபாகர நாடகம்.

சென்னை மனோரஞ்சித நாடகசபையாரால் நடாத்திவந்த இந்நாடகமானது வெகுநேர்த்தியாயும் அரிச்சந்திர விலாசத்திற்கு நேராக சத்தியமானது இத்தன்மைத்தென அறியக்கூடியதாயும் பாடுவோர்க்கு இனிப்பாயும் நாடகமாடுவோர்க்குக் களிப்பாயும் செந்தமிழ் நடையாயும் அற்புதவர்னமெட்டுகௗமைத்துளதாயு மியற்றி அச்சிட்டுளது. விலை அணா-3. வி. பி. மூலமாக அணா-5.

☞ 4-அணாவுக்கு தபால் ஸ்டாம்பு வாங்கி அடக்கம் செய்தனுப்பினல் புஸ்தகத்தைப் புக்போஸ்டில் அனுப்பிவிடப்படும்.

சோதிட பிரபஞ்சசேகரம், (இரண்டாம் பதிப்பு.)

இந்நூலினல் சகல ஜனங்களும் அவரவர்களுடைய நன்மை தீமை யாவற்றையும சோதிடரின்றி தாங்களே சுலபமாய்தெரிந்து கொள்ளலாம். இப்பூமியின்கண் சோதிடமுணர்ந்த புண்ணியவான்கள் இதுவரையில் அநேக சாதகஸ்கந்தங்களைக் கண்ணுற்றுக் களிப்படைந்திருந்தபோதிலும் இச்சாஸ்திரத்தின் பெருமையை எம் ஒரு நாவால் சொல்லத்தரமன்று. இந்நிமித்தம் 12-வருடம் தொண்டுபுரிந்தாலும் கிடைப்பதரிதெனவே எண்ணவேண்டும். இந்நூலை யாவருங் கண்ணுற்றாலொழிய ஆவலடங்காது. இதைக் கையிலெடுத்துப் பார்க்கும்போதே ஒவ்வொருவரும் சோதிடராவதற்குத் தடையிராது. இதைப்போல் எந்த நூலுங் கிடையாது. சிறுவர்களிடம் கொடுத்தாலும் மறுவார்த்தை சொல்லுமுன் சோதிடஞ்சொல்ல முயல்வார்கள். நமது ஆரிய நண்பர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய தவசியமானதுபற்றி இந்த இரண்டாம் பதிப்புப் புஸ்தகத்தை நல்ல கிளேஸ்கடிதத்தில் பிழையறப் பரிசோதித்தும் நூதனமாகச்சேர்த்தும் முதற்பதிப்பைவிட சுத்தமாகவு மச்சிட்டுளது. விலை அணா 12. வி. பி.சார்ஜ் அணா-3.

☞ இவ்விளம்பரத்திற் கண்டுள்ள அவிழ்தங்களும் புஸ்தகங்களுமன்றி மற்றுமுள்ள தமிழ்ப்புத்தகங்களும் இதர அவிழ்தங்களும் இன்னம் எவ்வித சாமான்களும் வேண்டுவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கெழுதி வி. பி. மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

க. பெ. நாராயணசாமி முதலியார் அண்ட் கம்பெனி,

பிரசித்த மருந்தும், புஸ்தகமும் வியாபாரம்,

வேப்பேரி போஸ்ட், மதராஸ் என். ஸி.